
# முதல் சக்தி



இந்திரா சௌந்தர்ராஜன்

# முதல் சக்தி

## (அணிமா)

இந்திரா சௌந்தர்ராஜன்

மின்நூல் ஆக்கம்: தமிழ்நேசன்

# முதல் சக்தி

# 1

*"சித்திகளில் முதலாவது அனிமா! இதன் மகிமை மிகப் பெரியது. இது கைவரப்பெற்றவர்கள் ஆறடி உயரத்தை ஒரு அணுத் துகள் அளவுக்கு ஆக்கிக் கொள்வார்கள்,*

*சுருக்கமாய் சொல்வதானால் பல அணுக்களின் திரட்சிதான் ஒரு பொருள் ஆகிறது. அதை கூட்டிக் கொள்வதும் குறைத்துக் கொள்வதுமே அனிமாவின் ஆற்றலாகும்.*

*இந்த ஆற்றலை யோகத்தால் அடையப் பெற்றவர்கள் காற்றில் கரைந்து எதிரில் எத்தனை பெரிய சுவரும் கதவும் இருந்தாலும் ஊடுருவி வெளியேறி விடுவார்கள்.*

*அதைத்தான் மாயமாய் மறைதல் என்கிறோம்"*

*–அஷ்டமா சித்து ரகசியத்திலிருந்து.*

அந்தப் பேருந்து ஒரு சீரான வேகத்தில் திருப்பதி மலையின் மலைச்சாலைமேல் ஏறிக்கொண்டிருந்தது. முகப்பில் ஒரு பிரபல வங்கியின் பெயரில் பேனர் ஒன்று கட்டப்பட்டிருந்தது.

உள்ளே அந்த வங்கியில் பணிபுரியும் ஊழியர்களின் கூட்டம் அவர்களிடையே ஒரே ஆட்டபாட்டம். அதில் ரங்கபாஷ்யம் என்பவர் மட்டும் அந்த ஆட்டபாட்டம் எதிலும் பங்கெடுத்துக் கொள்ளாமல் தலை வகிட்டைச் சீவியபடி வீசிக் கொண்டிருந்த மலைக்காற்றை சுகித்தவராய் திருமலையைப் பார்த்தபடி அமர்ந்திருந்தார்.

நெற்றியில் பரம திவ்யமாக ஸ்ரீசூரணம், உச்சந்தலையில் துளி செந்தூரம் என்று பார்க்க தெய்வப் பழமாகத் தெரிந் தார். வயது ஐம்பது இருக்கலாம், தலையில் பாதிக்குப் பாதி நரை முடி!

"என்ன சார். திருப்பதி வந்த உடனேயே சுவாமி நினைப்பு வந்துடுச்சா. அமைதியா வர்றீங்களே.."

அவருக்குப் பக்கத்தில் அமர்ந்திருந்த ராஜேந்திரன் என்பவன் மெல்ல அவரிடம் பேச்சுக் கொடுத்தான்.

"ஆமாம் ராஜேந்திரன். என் வரையில திருப்பதிங்கறது ஒரு பூலோக வைகுண்டம். இந்த சுற்றுலாவுக்கு நான் வர சம்மதிச்சதே பெருமாள் தரிசனமும் இதுல இருக்குங்கறதுக் காகத்தான்."

அவர் ஸ்லாகித்துக் கொண்டார். "வேடிக்கைதான் சார். இன்பச் சுற்றுலாவுல எதுக்கு திருப்பதியும் பழனியும்னு நம்ம ஸ்டாப்ஸ் சிலர் கேக்கறாங்க. நீங்க என்னடான்னா சாமி

தரிசனத்துக்காகத்தான் இந்த சுற்றுலாவுலேயே கலந்துகிட்டதா சொல்றீங்க."

ராஜேந்திரன் அவரைச் சீண்டுகிற மாதிரி ஒரு கேள்வியைக் கேட்டு வைத்தான்.

"நீங்க வேணும்னா பாருங்க. அப்படிக் கேட்டவங்க கூட சாமி தரிசனத்துக்குப் பிறகு மாறிடுவாங்க. திருப்பதி பெருமாளை சேவிக்க கொடுத்து வெச்சிருக்கணும் ராஜேந்திரன், அதோட இந்த மலைல நம்ம காலடிபட நாம கொடுத்து வெச்சிருக்கணும்."

ரங்கபாஷ்யம் பக்தியோடு சொன்னது ராஜேந்திரனை ஒன்றும் செய்யவில்லை. ஆனால் சுராங்கனி பாட்டுப் பாடிவிட்டு தொண்டை வறண்டு போய் ஒரு பிஸ்லரி பாட்டிலைத் திறந்திருந்த பாண்டியன் என்பவனை மட்டும் சற்று கேலியாக சிரிக்க வைத்தது.

"என்ன பாண்டியன் சிரிக்கறே. நம்ம ரங்கபாஷ்யம் சார் சொன்னது உனக்கு சிரிப்பா இருக்குதா?"

"வேண்டாம் ராஜேந்திரன், என்னை விட்று! சார் அவரோட கருத்தைச் சொல்றாரு அவ்வளவுதான்."

அது சரி... ஆனா நீ சிரிக்கறதப் பார்த்தா அதெல்லாம் ஒண்ணுமில்லேங்கற மாதிரி தெரியுதே...?"

"என்னைத்தான் உனக்கு நல்லாத் தெரியுமே. நான் விஞ்ஞானத்தை நம்பற பார்ட்டி, சமயங்கள்ல விஞ்ஞானத் தையே கேள்வி கேக்கறவன், இதெல்லாம் அவங்கவங்க பர்சனல், விட்டுத் தள்ளு.'' பாண்டியனின் பதில் அவன் யார் என்பதைச் சொல்லாமல் சொல்ல ரங்கபாஷ்யமும் அதைக் கேட்டு பதிலுக்கு ஒரு சிரிப்பு சிரித்தார்.

"பாண்டியனும் சிரிக்கறான். நீங்களும் சிரிக்கறீங்க. உங்க ரெண்டு பேரையும் பார்த்தா எனக்கும் சிரிப்பு வருது'' என்ற ராஜேந்திரன் அப்படியே வெளியே பார்த்தான்.

அவ்வளவாய் அடர்வு இல்லாத சுமாரான வனச் சரகம். அதன்மேல் மேகப்பொதிகளின் தவழல்.

ரசனைக்குரிய காட்சிதான்.

பேருந்தும் வளைந்து வளைந்து முழங்கால் முடிச்சு மலைப் பகுதிக்கருகே சென்று கொண்டிருந்தது.

அப்பொழுதுதான் அவன் கண்களில் ஆச்சரியமான அந்தக் காட்சி பட்டது.

மலைச்சரிவில் மரக் கூட்டங்களுக்கு நடுவில் இடுப்பில் துண்டு மட்டுமே அணிந்திருந்த ஒரு வயதான பெரியவர், ஆட்டுக்குட்டியை தோளில் தூக்கிப் போட்டுக் கொண்டு நடக்கும் ஒரு இடையனைப் போல ஒரு சிறுத்தைப் புலியை தோளில் போட்டுக்கொண்டு ஒரு சில வினாடிகள் மட்டுமே

தெரிந்த நிலையில் மரக்கூட்டங்கள் நடுவில் புகுந்து மறைந்தும் போனார்!

"பாண்டியன் பாண்டியன் அதோ பாரு." அலறிவிட்டான் ராஜேந்திரன்.

பாண்டியனும் வெளியே பார்த்துவிட்டு "எதைப் பார்க்கச் சொன்னே ராஜேந்திரா?'' என்று திருப்பிக் கேட்டான்.

"ஒரு வயசானவர் தோள்ள சிறுத்தைப் புலியை போட்டு கிட்டு நடந்துகிட்டிருந்தார் பாண்டியன்." -ராஜேந்திரன் விவ ரிக்க பேருந்துக்குள் இருந்த அவ்வளவு பேரும் ராஜேந்தி ரனை ஒரு பார்வையும், வெளியே மறுபார்வையும் பார்த்தனர்.

பாண்டியன் சிரித்து விட்டான்.

"என்ன ராஜேந்திரா... கலாட்டா பண்றியா?''

"இல்லப்பா... இப்ப நான் பார்த்தேன்."

"பாத்துருப்பே... பாத்துருப்பே..." -மீண்டும் கேலிச் சிரிப்பு பாண்டியனிடம்.

பேருந்து சீரான வேகத்தில் ஏறிக்கொண்டே இருந்தது. மற்றவர்களும் சிரித்தார்கள். ராஜேந்திரனுக்கே என்னவோ போலாகிவிட்டது.

ஒருவேளை தான் பார்த்தது பொய்யோ.. நிஜமாக அப்படி

ஒன்றில்லையோ?

காட்டேஜ் ஒன்றின் முன்னால் பேருந்து நின்றது. சுற்று லாவை வழிநடத்தும் அக்கவுண்டண்ட் ஆனந்தமூர்த்தி நின்று விட்ட பேருந்தில் இருந்தபடியே பேச ஆரம்பித் திருந்தார்.

"டியர் ஃப்ரண்டஸ்!" நம்ம சுற்றுலாவோட கடைசி இடமான திருப்பதி மலைக்கு நாம இப்ப வந்து சேர்ந்துட் டோம், ஸ்வாமி தரிசனம் பண்ணிட்டு நாளைக்கு காலைலதான் நாம திரும்ப கிளம்பப் போறோம்.

நடுவுல கிட்டத்தட்ட இருபது மணிநேரத்துக்கும் மேல இருக்குது. இந்த காட்டேஜ்ல எல்லோருக்கும் ரூம் புக் பண் ணியிருக்கு. அதுல தங்கி குளிச்சிட்டு தரிசனம் பண்ணப் போறவங்க தரிசனம் பண்ணப் போகலாம். இஷ்டமில்லா தவங்க அமைதியா ரெஸ்ட் எடுக்கலாம். அது அவங்கவங்க விருப்பம்.

ஒரு விஷயம்!

நாளைக்கு காலைல ஒன்பது மணிக்கு ஷார்ப்பா நம்ம பஸ் புறப்பட்டுடும். அதை மட்டும் மறந்துடாதீங்க."

ஆனந்தமூர்த்தி பேசிவிட்டு முதல் ஆளாக தன் சூட்கே சுடன் கீழே இறங்கினார். பின்னாலேயே வேகவேகமாக இறங்கினார் ரங்கபாஷ்யம்.

கடைசி ஆளாகத்தான் இறங்கினான் பாண்டியன்.

கை காலையெல்லாம் நெட்டி முறித்து விட்டு அப்படியே சுற்றி ஒரு பார்வை பார்த்தான். எல்லோரும் நடந்தபடி இருந்தனர். அவர்களில் ராஜேந்திரன் தீவிர சிந்தனை யோடு தேங்கித் தேங்கி நடப்பது தெரிந்தது.

"ராஜேந்திரா..."

"என்ன பாண்டியன்." -ராஜேந்திரனும் நின்று திரும்ப,

"உன் திட்டம் என்ன?" -கேள்வியோடு நெருங்கினான் பாண்டியன்.

"இனிமேதான் யோசிக்கணும்."

"அப்ப சாமி கும்புடப் போறதில்லியா நீ?"

"கூட்டம் அதிகமா இருந்தா அடுத்த தடவைதான்."

"இருந்தாலும் இல்லேன்னாலும் அடுத்த தடவையே கும்பிட்டுக்கோ. நாம அப்படியே ஒரு ரவுண்டு அடிச்சுட்டு வருவோமா?"

பாண்டியனின் கேள்விக்கு அரை மனதாக தலையை ஆட்டியவன் தொடர்ந்து நடந்து அறைக்குள் சூட்கேஸை வைத்தான். பாண்டியனும் வைத்துவிட்டு வெளியே வந்தான்.

இருவரும் சேர்ந்து நடந்தார்கள்.

நடக்கும்போது ராஜேந்திரனிடம் திரும்பவும் அந்த புலி

மனிதர் பற்றிய பேச்சு.

"பாண்டியா... நான் நிஜமா அந்த புலி மனுஷனைப் பார்த்தேம்ப்பா..."

''பேசாம வா ராஜேந்திரா, அந்தக் காட்டுக்குள்ள கால் வைக்கவே இடமில்லை. அவ்வளவு புதர். இதுல ஒரு ஆள் தோள்ள புலியோட நடந்தான்னா என்னய்யா அர்த்தம். எதுக்கு, இப்படி ரீல் விட்றே?''

"இல்ல பாண்டியா. நான் பார்த்தேன். என்னை நம்பு"

"சரி ராஜேந்திரா. நீ பார்த்த! இப்ப பேசாம என் கூடவா."

பாண்டியன் ராஜேந்திரனின் பேச்சுக்கு ஒரு முற்றுப் புள்ளி வைத்துவிட்டு நடந்தான்.

ராஜேந்திரனுக்கு என்னவோ போல் ஆகிவிட்டது.

மீண்டும் மனசுக்குள் குடைச்சல், தான் பார்த்த அந்த காட்சி உண்மையா பொய்யா?

மலை ஜே ஜே என்று இருந்தது. பாதிக்குப் பாதி மொட் டைத் தலைகள். ஊடே கறுப்புக்கயிறு, டாலர்கள் என்று விற்கும் கூட்டம் வேறு. ஒரு இடத்தில் சடைபிடித்த தலையும் மிக நீள தாடியுமாக ஒரு பிச்சைக்கார சன்யாசி ஒருவர். ஒற்றைக் காலில் நின்று கொண்டு பிச்சை எடுத்தபடி இருந்தார். முன்னால் துண்டு விரிந்து கிடக்க அதில்

சில்லரைகள்!

அந்த சன்யாசி பல மணிநேரமாய் துளிகூட அசையவே இல்லாமல் நிற்கிற மாதிரிதான் தோன்றியது. பாண்டியனுக்கு சிரிப்பு வந்துவிட்டது.

"ராஜேந்திரா, கொடுமையைப் பார். பிச்சை எடுக்கறதுல கூட இந்த மலை எத்தனை விதம் பார்த்தியா?"

அவன் கேட்ட நேரம் அந்த சன்யாச மனிதர் எதிரே ஒரு கார் வந்து நின்றிருந்தது. உள்ளே இருந்து பட்டு வேட்டியும் தங்கச் சங்கிலியுமாய் ஒரு பெரியவர், சன்யா சியைப் பார்த்துவிட்டு வெகு வேகமாக இறங்கி வந்தார். சன்யாசியும் அவரைப் பார்த்து ஒரு சின்னப் புன்னகையை உதிர்த்தார்.

"சாமி... என்ன சாமி இது கோலம்?" இது அந்த பணக் காரர்.

"ஒண்ணுமில்ல. நேர்த்திக்கடன்!" -இது சாமியார்.

"நேர்த்திக்கடனா... உங்களுக்கா... என்ன சாமி இது. நீங்களா இப்படி பிச்சை எடுக்கறீங்க?"

"ஏன் எடுத்தா என்ன..?"

"இல்ல சாமி... உங்களை நான் இங்க இப்படி பார்ப்பேன்னு நினைக்கவே இல்லை."

"தொந்தரவு பண்ணாதே. போ... போய் அந்த ஏழுமலை

யானை தரிசிச்சிட்டு போய்கிட்டே இரு."

பிச்சைக்கார சாமியாரின் பதிலும், பணக்கார மனிதரின் கேள்விகளும் பாண்டியனையும், ராஜேந்திரனையும் அதிர வைத்து விட்டது.

அதன்பின் அந்த பணக்காரர் எதுவும் பேசவில்லை. எதைப் பற்றியும் யாரைப் பற்றியும் கவலைப்படாமல் பரபரப் பான அந்த சாலையில் பொதேல் என்று சாமியாரின் காலில் விழுந்தார். பின் ஜிப்பா பாக்கெட்டில் கையைவிட்டு நோட்டுக்களை அள்ளி முன்னால் உள்ள துணியில் போட்டார்.

பின் நின்று ஒரு சோகப்பார்வை. அதன் பின் நடை!

காரைச் சமீபித்து கதவைத் திறக்கப் போனவரை பாண்டியனின் குரல் தடுத்தது.

"சார் ஒரு நிமிஷம்..."

அவரும் திரும்பினார்.

"யார் சார் அவர்?"

"அந்த சாமியாரைக் கேக்கறீங்களா?"

"ஆமாம். அவரைப் பார்த்தா பிச்சைக்காரர் மாதிரி தெரியுது. நீங்களோ அவரை சாமியா நினைச்சு கும்பு டறீங்க, எனக்கு ஆச்சரியமாயிருக்குது."

"அவர் பேரு திருமலைச்சாமி. பெரிய சித்தர். அவர் மனசு வெச்சா அவர் காலடில கோடி கோடியா கொட்ட என்னை மாதிரி எவ்வளவோ பேர் இருக்கோம், ஆனா காசு பணமெல்லாம் அவருக்கு துச்சம்.''

"அப்புறம் எதுக்கு பிச்சை எடுக்கறார்?"

"அதான் சொன்னாரே கேக்கல நீங்க? இது நேர்த்திக் கடன்."

"அப்படின்னா..?''

"பிச்சை எடுத்து பிச்சைல கிடைக்கிற காசை உண்டி யல்ல சேக்கறதா வேண்டிகிட்டிருப்பாரு.''

"பெரிய சித்தர்ங்கறீங்க. பிச்சை எடுத்துத்தான் உண்டி யல்ல காசைச் சேக்கணுமா? வேடிக்கையா இருக்குதே."

"நேர்த்தி அப்படி.."

"இப்படி எல்லாம் கூட வேண்டிக்குவாங்களா?"

பாண்டியன் ஏளனமாய் கேட்ட கேள்விக்கு அந்த பணக் காரரிடம் ஒரு சிரிப்புதான் பதிலாக முளைத்தது. அதற்கு மேல் எதையும் பேசவில்லை. காரில் ஏறிப் போயே போய் விட்டார்.

"பாத்தியா ராஜேந்திரா. என்னோட கேள்விக்கு அந்த ஆளால பதில் சொல்ல முடியல."

"இல்ல பாண்டியன். உனக்கு பதில் சொல்லி நேரத்தை எதுக்கு வீணாக்கிக்கிட்டுன்னு கூட அவர் நினைச்சிருக்க லாம் இல்லையா?''

ராஜேந்திரனின் வித்யாசமான மடக்கல் பாண்டியனை முறைக்க வைத்தது.

"முறைக்காதே... நட! ஆமா இப்ப எங்க போறோம்?"

"எங்கையாவது போவோம், எங்க பார் கூட்டம், யாரைப் பார் மொட்டை. ஆமா இந்த மலைல கோவிலைத் தவிர சைட் சீயிங் பிளேஸ் எதாவது இருக்குதா?''

"பாபவினாசம் போவோமா. அங்க ஃபால்ஸ் இருக்குது. குளிக்கலாம்."

''முதல்ல கிளம்பு!''

இருவரும் வேகமாயினர். அதற்கான டாக்ஸி ஒன்றில் ஏறும்போது திரும்பவும் ஒரு பார்வை, அந்த பிச்சைக்கார சன்யாசி ஆடாமல் அசையாமல் ஒற்றைக் காலில் ஒரு யோகம் புரிபவர் போல் நின்றபடியே இருந்தார்.

"சரியான கிறுக்கன்யா!''

பாண்டியனின் உதட்டில் முணுமுணுப்பு!

# 2

*"இதிகாச புராணங்களில் பல தெய்வங்களின் செயல் பாடுகளில் அனிமா உள்ளது. தேவர்களுக்கும் அசுரர் களுக்கும் யுத்தம் நேரிட்டபோது அசுரர்களின் பார்வையில் இருந்து தப்ப பல தேவர்கள் அணிமா யோகம் மூலமாகவே தங்கள் பௌதீக புற உடலை அதன் அணுக்களை கலைத்து அதை ஒரு புள்ளியளவு சிறிதாக்கிக் கொண்டு காற்றில் மிதந்தும் செடிகொடி களின் ஊடே பதுங்கியும் தப்பித்தனர்.*

*இந்திரன் கூட இப்படி ஒருமுறை அணிமாவால் உடலை ஒரு புள்ளியளவு ஆக்கிக் கொண்டு ஒரு மலரின் மகரந்தங்களில் கலந்து மறைந்து கிடந்ததாக புராணம் கூறுகிறது."*

*–அஷ்டமா சித்து ரகசியத்தியிருந்து*

**அ**ந்த டாக்சியிடம் அநியாயத்துக்கு ஒரு வேகம்!

டிரைவர் அனாயசமாக ஓட்டிக்கொண்டு போனான்.

"பார்த்துப் போப்பா."

"பார்த்துத்தான் போறேன். மொள்ள போனா ஒரு நாளைக்கு பத்து ட்ரிப் கூட அடிக்க முடியாது."

"இப்ப எத்தனை ட்ரிப் அடிக்கறே.?"

"முப்பது... நாப்பது..."

"அடேயப்பா... நல்ல சில்லரைதான்று சொல்லு."

"எங்க... எல்லாம் பெட்ரோலுக்கும் போலீசுக்குமே போயிடுது."

"இங்கையும் அவங்க தொல்லையா?"

"எங்க அவங்க தொல்லை இல்லை. ஆமா உங்களுக்கு எந்த ஊர்?"

"சென்னை..."

"சாமி தரிசனம் ஆயிடிச்சா?"

"நாங்க சாமி தரிசனத்துக்கு வரலை!"

பாண்டியனின் பதில் டிரைவரைத் திரும்பிப் பார்க்க வைத்தது.

"என்ன பாக்கறே... நாங்க சும்மா சுத்தி பாக்க வந்தோம். இந்த மலைல இந்த பாபவினாசம் தவிர வேற எங்கல்லாம் போகலாம்..."

"தும்புரு தீர்த்தம்னு ஒரு இடம், பாபவினாசத்துல இருந்து பத்து கிலோ மீட்டர். சூப்பரா இருக்கும். ஆனா நடக்கணும்."

"ஏன் கார் போகாதா?"

"காட்டுப்பாதை, மிருகங்க தொல்லைவேற, நடைதான்.

பெரும்பாலும் சாமியாருங்க, ரொம்ப விபரம் தெரிஞ்சவங்க தான் போவாங்க."

பாண்டியன் பார்வை உடனே ராஜேந்திரனை துளை போட்டது.

"என்ன பாண்டியா. அங்க போகலாம்கிறியா?''

"ஆமாம்... இந்த ஆள் சொல்றத பார்த்தா த்ரில்லா இருக்கும்போல இருக்குது. போவோமே."

"பத்தும் பத்தும் இருபது கிலோ மீட்டர் நடக்கணுமா முல்ல?''

"நடப்போம்... இப்ப என்ன?"

"என்னால முடியாது. மூடிகிட்டு பாபவினாசம் தீர்த் தத்துல குளிச்சுட்டு போய்ப் படுப்போம். இல்ல சீட்டுக் கச்சேரி போடுவோம்."

"அதைத்தான் டெய்லி செய்யறோமே... வா ராஜேந்திரா போய்ட்டு வருவோம்."

பாண்டியன் அழுத்தமாய் பேசி ராஜேந்திரனை சம்மதிக்க வைக்க, காரும் பாபவினாசம் அருவி முன் அவர்களை உதிர்த்து விட்டு திரும்பியது.

அருவியில் யானை சிறுநீர் கழிக்கிற மாதிரியான பரு மனில் பெயருக்கு நீர் விழுந்து கொண்டிருந்தது. அதிலும்

ஐம்பது அறுபது தலைகள் முண்டிக் கொண்டு மோதிக் கொண்டிருந்தன!

"பார்த்தியாடா இந்தக் கொடுமையை... இதுக்காடா டாக்சியில வந்தோம்?''

"அது சரி... மழைக்காலத்துல வந்தா ஒருவேளை நல்லா தண்ணி விழுமோ என்னவோ?''

ராஜேந்திரன் கிண்டலடிக்க, அருவிக் கூட்டத்தைப் பார்த்த பாண்டியனுக்கு பகீர் என்றது. அந்தக் கூட்டத்தில் சில நிமிடங்கள் முன்னால் திருப்பதி மலையின் முன்னால் சாலை மேல் ஒற்றைக் காலில் நின்றுகொண்டு பிச்சை எடுத்துக் கொண்டிருந்த சாமியார்!

"ராஜேந்திரா,அங்க பார் அந்த பிச்சைக்கார சன்யாசி."

"அட ஆமாம்.. இந்த ஆள் எப்படி நமக்கு முந்தி இங்க வந்தான்?" -ராஜேந்திரனும் வாய் பிளந்தான்.

"ஒரே மாயா ஜாலமா இருக்கே. நமக்கு முந்தியோ பிந்தியோ ஒரு கார் கூட வந்த மாதிரி தெரியல. வேற குறுக்கு வழியும் இருக்கற மாதிரி தெரியல."

"ஒருவேளை அந்த ஆள்தானா. இல்ல அந்த ஆள் மாதிரியே வேற யாராவதா?''

இருவரும் மாறி மாறி கேள்விகளில் விழுந்து எழுந்

திருந்தார்கள்.

ஒரு கூடுதல் ஆச்சரியமாக அவர் அருவியில் குளிக்கப் போக தண்ணீரும் அதிகமாக திடீர் வெள்ளம் போல விழ ஆரம்பித்திருந்தது.

மற்ற யாரும் அதை அவ்வளவு பெரிதாக நினைத்த மாதிரியும் தெரியவில்லை.

"என்னப்பா இது ஒரே மாயமா இருக்கு. பறந்து வந்துருப்பானா இந்த ஆள்...?"

"தெரியலப்பா... இப்பத்தான் வர்ற வழியில தோள்ள புலியோட ஒருத்தனை நான் பார்த்தேன். அதை சொன் னப்போ சிரிச்சே. இப்ப இங்க இந்த ஆள்! இதை எந்த கணக்குல சேக்கறதுன்னு தெரியலியே...?"

''எதுக்கு மண்டையை பிச்சிக்கிட்டு. அந்த ஆள்கிட் டையே கேப்போமே...''

இருவரும் காத்திருக்கத் தொடங்கினர். அந்த சன்யா சியும் குளித்து முடித்தவராக ஈரம் சொட்ட திரும்பி வந்தார். தண்ணீரும் பழையபடி யானை மூத்திரம் போல சிறுத்து விட்டது.

"சாமீ..." -பாண்டியன் அவரைக் கூப்பிட்டான். அவரும் பார்த்தார்.

"கொஞ்சம் முந்தி திருப்பதி மலைல ஒத்தைக் கால்ல நின்று பிச்சை எடுத்துக்கிட்டு இருந்தது நீங்கதானே?"

அவர் ஆமோதிப்பதாய் சிரித்தார்.

"எப்படி அங்க இருந்து எங்களுக்கு முந்தி இங்க வந்தீங்க?"

அவர் மீண்டும் சிரித்தார்.

"ஏதாவது குறுக்கு வழி இருக்குதா..?"

"எனக்கு குறுக்கு வழியெல்லாம் தெரியாதுப்பா." -அவர் குரலில் சொல்ல முடியாத ஒரு இதம் பதம்!

"அப்ப எப்படி?"

"தெரிஞ்சுகிட்டு என்ன பண்ணப் போறீங்க?"

"ஒரு க்யூரியாசிட்டிதான், நாங்களே எம்பது மைல் வேகத்துல வந்தோம். டிரைவர் வண்டியை கவுத்துடுவானோன்னு பயமா கூட இருந்துச்சு. அதைவிட வேகமா நீங்க வந்துருந்தாதான்..."

"அநாவசியமான கேள்வி.."அவர் சொன்னபடி நடந்தார்.

"சாமி... சாமி..."

பாண்டியன் விடவில்லை.

"என்னப்பா..."

"அந்தக் கேள்விதான் அநாவசியம்னு சொல்லிட்டீங்க. சரி விடுங்க. இங்க இருந்து பத்து மைல் நடந்தா தும்புரு தீர்த்தம் வருமாமே. எப்படி போகணும்?"

-அவர் உடனே ஒரு மலை மேல் ஏறும் ஒற்றையடிப் பாதை போன்ற ஒன்றைக் காண்பித்தார்.

"நல்லது சாமி... அங்க நீங்க போயிருக்கீங்களா?''

"அதுதான் என் இருப்பிடம்." -சொன்னபடி அவரும் அந்த பாதையில் நடந்தார்.

"சாமி... சாமி... இப்ப நீங்க அங்கதான் போறீங்களா?''

"ஆமாம்..."

"நாங்களும் வர்றோம். அங்க போறது ரொம்ப த்ரில்லா இருக்குமாமே?''

அவர் சிரித்தார். சடைமுடையில் ஈரம் சொட்டி முடிந் திருந்தது. அதை ஒரு உதறு உதறிவிட்டுக் கொண்டார். நடந்தார்.

ராஜேந்திரனும், பாண்டியனும் பின் தொடர்ந்தனர்.

நெடுந்தூரம் வரை அவர் எதுவும் பேசாமல் கையை ஒரு மாதிரி ஆட்டிக்கொண்டே நடந்தது வித்யாசமாக இருந்தது.

மலைப்பாதையும் மேடும் பள்ளமுமாக மிக சிரமத்தைத் தந்தது.

"பாண்டியா.. திரும்பிடலாம். அங்கபோய் என்ன பண்ணப் போறோம். எனக்கு பசிக்கவேற ஆரம்பிச்சிடிச்சு" -என்ற ராஜேந்திரன் ஒரு இடத்தில் தடுமாறி விழப் போனான்.

"பாத்துப்பா... பாத்து..." -பாண்டியன் விழப் போனவ னைத் தூக்கி நிறுத்தி ஆசுவாசித்தான். பின் இருவரும் நிமிர்ந்து முன்னால் பார்த்தபோது நடந்து போய்க் கொண் டிருந்த அந்த பிச்சைக்கார சன்யாசியைக் காணவில்லை.

"ஏய் எங்கய்யா போய்ட்டான் அந்த ஆள்?" -கேள்வி யோடு கழுத்து வளைந்தது. நாலாபுறமும் கண்கள் ஒரு ஓட்டம் ஓடியது.

எதிரில் ஒரு மலைமுகடு. அதன்மேல் அந்த சன்யாசி யின் நடை ஒரு சில வினாடிகள் தெரிந்தது. அந்தப் பக்கமாய் உள்ள சரிவில் அவர் இறங்கி மறைந்தும் விட்டார்.

"ராஜேந்திரா நிஜமா அந்த ஆள் பெரிய மாயாவிதான். ஒரு பத்து செகண்டுல கிட்டதட்ட அரை கிலோ மீட்டர் போய்ட்டானே. இப்படித்தான் திருப்பதி மலை மேல இருந்தும் பாபவினாசம் அருவிக்கு வந்துருப்பானா?"

"ஒரு எழவும் புரியலப்பா. யார்கிட்டையாவது சொன்னா நம்மை பைத்தியம்பாங்க. இதோ பார்.. பேசாம திரும்பு வோம். தும்புருத்தீர்த்தமும் வேண்டாம் தம்புருத் தீர்த்தமும் வேண்டாம். நடக்கற ஒவ்வொண்ணையும் பார்த்தா பயமா

இருக்குப்பா..."

-ராஜேந்திரன் அழாக் குறையாக பேச பாண்டியனுக்கும் திரும்பி விடுவதே நல்லது என்று தோன்றியது.

அதேசமயம் அந்த சன்யாசி தான் தும்புருத்தீர்த்தம் அருகே வசிப்பதாக சொன்னதும் நினைவில் வந்தது. "இல்ல ராஜேந்திரா. நீ வேணா போ. நான் அங்கபோய் இந்த ஆள் அங்க என்ன பண்ணப் போறான்னு பாக்காம வரப்போறதில்லை."

"என்னய்யா இது வீம்பு அந்த ஆள் என்ன பண்ணினா நமக்கென்ன? நாம டூர் வந்துருக்கோம். இப்படி கண்டவன் பின்னாடி போய் ஆராய்ச்சி பண்றதுக்காக வரலை."

"இதோ பார்... வரிசைல நின்னு மிதிபட்டு அடிபட்டு சாமி கும்பிட்டேன் பேர்வழின்னு அவஸ்தைபட்டுட்டு வர்ற தைவிட இதுல நிறைய அர்த்தம் இருக்கறதா எனக்குப் படுது.

நான் கதைலதான் இந்த மாதிரி படிச்சிருக்கேன். அதெல்லாம் அபார புளுகுன்னு ஒதுக்கியிருக்கேன். இப்ப கண் எதிரே பார்க்கும்போது அது எப்படின்னு தெரிஞ்சுக் கறதுல என்ன தப்பு?"

"புடலங்கா... நீ கேட்ட கேள்விக்கு அந்த ஆள் பதில் சொன்னானா? இளப்பமா சிரிச்சான். இப்ப அங்கபோய் மேலும் மேலும் கேள்விகேட்டா அடிச்சாலும் அடிச்சி

டுவான். பேசாம வாப்பா..."

"அடிபட்டாலும் பரவாயில்லை. நான் பதிலை தெரிஞ்சுக்காம வரமாட்டேன்."

-பாண்டியனின் உறுதி ராஜேந்திரனுக்கு எரிச்சலை பீறிட வைத்தது.

"சரி... போய்ட்டு வா.. நான் போறேன். எப்பவும் எல்லா ருக்கும் ஒரு வழின்னா உனக்கு மட்டும் தனிவழி."

-ராஜேந்திரன் திரும்பிவிட, பாண்டியன் அதைப்பற்றி கவலைப்படாமல் வேகமாக நடந்தான். ஆச்சரிய உணர் வுகள் அவனுக்குள் கொழுந்து விட்டு எரிந்தபடி இருந்தன.

மலைப்பாதையும் நீண்டு வளைந்து வளைந்து தெளிந்து போய்க் கொண்டேயிருந்தது! ஒரு வளைவில் ஓங்கி வளர்ந் திருக்கும் பிச்சிமரத்தின் அடியில் அந்த பிச்சைக்கார மனிதர் படுத்தபடி இருந்தார். பாண்டியன் வருவதைப் பார்த்து எழுந்து அமர்ந்தார். அவனும் அவரருகில் வந்து நின்றான். தீர்க்கமாக பார்த்தான்.

"என்ன பாக்கறே... எங்க உன் நண்பன்?"

"அவன் போய்ட்டான்..."

"ஏன்?"

"ஏன்னா... அவனுக்கு பிடிக்கலை."

"தம்பி... அவன் ரொம்ப பயந்துட்டான்.''

"அதுவும் கூட ஒரு காரணமாக இருக்கலாம். அது சரி, நீங்க இங்கையே உக்காந்துட்டீங்களே. தும்புரு தீர்த்தத்துக்கு போகலையா?''

"போகலாம். மெல்லப் போகலாம்."

"அங்க எதைக் கேட்டாலும் சிரிச்சீங்க. இங்க நல்லா சகஜமா பேசறீங்களே."

"அங்க நான் உன் கேள்விகளுக்கு பதில் சொல்லி யிருந்தா உன் நண்பன் மிரண்டு போயிருப்பான்."

அவர் சொல்லி முடிக்க, திடும்மென்று புலி ஒன்றின் உறுமல் சப்தம் கேட்டது. பாண்டியனுக்கு பதைப்பாகி விட்டது.

புலியேதான்!

அதுவும் ஒரு நாய்க்குட்டி போல ஓடிவந்து அந்த சன்யாசி அருகில் நின்றபடி அவர் தோளை நக்க, அவரும் அதன் பிடரியை உசுப்பி வருடியெல்லாம் கொடுத்தார்.

பாண்டியனுக்கு கண்களிரண்டும் செருகாத குறை. அவரோ, "போடா.. போய்ட்டு அப்புறமா வா." என்று அதைப் பார்த்து சொல்ல, அதுவும் திரும்பி நடந்து புதரில் புகுந்து மறைந்தது.

"சாமி... நீங்க யார்? எனக்கு உங்களப் பார்க்க பார்க்க பிரமிப்பா இருக்குது."

"இருக்கும்.. இருக்கும்.. அதிகம் படிச்சவனைப் பார்த்தா படிக்காத தற்குறிக்கு பிரமிப்பாதானே இருந்தாகணும்."

"என்ன சொல்றீங்க?"

"நீ ஒரு தற்குறின்னேன். இல்லேன்னா இந்த மலைல எல்லாரும் அந்த ஏழுமலையானை தேடிப் போய்க்கிட்டிருக் கும் போது, நீ இப்படி என்னைத் தேடி வருவியா?"

"நான் வரலை.. என்னை நீங்க வர வைச்சீங்க, நிஜமா சொல்றேன். எனக்கு இந்த மாயமந்திரத்துல எல்லாம் நம்பிக்கை இல்லை. ஆனா உங்களைப் பாத்ததுல இருந்து அதெல்லாம் உண்மையோன்னு நினைக்கறேன்."

"அடப்போப்பா... மாயமாவது மத்திரமாவது" அந்த சன் யாசி கையை உதறிக்கொண்டு ஒரு வெடிச்சிரிப்பு சிரித்தார்.

"அப்ப இங்க நடக்கறதெல்லாம் என்ன சாமி?"

"இங்க என்ன நடந்துச்சு... ஒண்ணும் நடக்கலையே."

"ஒண்ணும் நடக்கலையா? பல கிலோ மீட்டர் தூரத்தை பறக்காத குறையா கடக்கறீங்க. ஆளை அடிச்சு விழுங்கற புலியை தாயாட்டம் நினைச்சு கொஞ்சறீங்க. இதெல்லாம் என்ன?"

"ஒண்ணுமேயில்லை, ஆமா ரேடியோ பெட்டி பாடுதே எப்படிப்பா?"

"எதுக்கு கேக்கறிங்க?"

"கேக்கறதுக்கு பதில் சொல்... அந்த பெட்டி பாடுதே எப்படி?"

"எப்படின்னா... காத்துல வர்ற ஒலி அலைகளை அது இழுத்து சப்தமா திருப்பித் தருது. பாட்டு கேக்குது."

"அதை யார் கண்டுபிடிச்சது?"

"மனுஷன்தான்!"

"அப்ப அது பெரிசா. மனுஷன் பெரியவனா?"

"மனுஷன்தான், அதுல என்ன சந்தேகம்."

"இந்த மனுஷன் இந்த மாதிரி கண்டுபிடிக்க வேண்டியது நிறைய இருக்குதானே?"

"நிறைய்ய... அதான் விஞ்ஞானிங்க எப்பப்பார் ஆராய்ச்சி பண்ணிகிட்டே இருக்காங்களே..."

"அது சரி.. எவ்வளவு ஆராய்ச்சி பண்ணாலும் இல்லாத ஒண்ணை கண்டுபிடிக்க முடியுமா?"

"முடியாது..."

"இருக்கற ஒண்ணைத்தான் கண்டுபிடிக்க முடியும்?"

"ஆமா!''

"நானும் அப்படி ஒண்ணைக் கண்டுபிடிச்சு வெச்சி ருக்கற ஒரு விஞ்ஞானின்னு வெச்சுக்கையேன்.''

"நீங்க விஞ்ஞானியா.. அந்த பணக்காரர் சித்தர்னு சொன்னாரே."

"சித்தர் அலைஸ் விஞ்ஞானின்னு வெச்சுக்கையேன்."

"சரி.. நீங்க கண்டுபிடிச்சது எதை?''

"அணிமான்னு ஒரு விஷயம். அஷ்டமாசித்தில முதல் சக்தி அது. அதைத்தான் கண்டுபிடிச்சு பயன்படுத்திகிட்டும் இருக்கேன்."

"அணிமாவா... அணு விஞ்ஞானம் தெரியும். இதென்ன அணிமா..?''

"அணிமா'வும் விஞ்ஞானம்தான். கேள்வியா கேட்கற உன்னை எனக்கு ரொம்ப பிடிச்சிருக்கு. ஊருக்கு போய் உன் பேங்க்குக்கு ஒரு வருஷம் லீவு போட்டுட்டு வா. அதைப் பத்தி பேசலாம்."

"பேசறதுக்கு ஒரு வருஷம் லீவு போடணுமா?"

"என்னப்பா பண்ண.. சப்ஜெக்ட் அப்படி? உன்னை மாதிரிதான் நானும், ராணுவத்துல மேஜரா இருந்தேன். இமயமலை பார்டர்ல ட்யூட்டி பார்க்கும்போது ஒரு சாமி

யாரை பார்த்தேன். நினைச்ச இடத்துல உட்காந்துகிட்டு என்னை ஆச்சரியப்பட வெச்சார். எப்படின்னு கேட்டேன். வேலையை விட்டுட்டுவா, சொல்றேன்னார். துணிஞ்சு வேலையை விட்டேன். சொல்லித்தந்தார். ஒருநாள் இரண்டு நாள் இல்ல. நாலு வருஷம், நானோ உனக்கு ஒரு வருஷம்தானே சொல்றேன்."

"இந்த அணிமாவால என்ன செய்ய முடியும்?"

"எல்லா கேள்வியையும் லீவு போட்டுட்டு வந்து கையை கட்டிகிட்டு பணிவா நின்று நல்ல சிஷ்ய பிள்ளையா மாறி கேளு. சொல்றேன்.. இப்ப கிளம்பு."

அவர் வந்த வழியை காட்டினார். பாண்டியன் மலங்க மலங்கப் பார்த்தான். பின் எதுவும் பேசாமல் திரும்பி நடந்தான்.

நடப்பவனை "தம்பி ஒரு நிமிஷம்!" என்று கூப்பிட்டு தடுத்தவர். அவனருகே சென்று கைகளைப் பற்றிக் கொண் டார். "என்கூட சேர்ந்து நட... வேகமாக போய்ச் சேரலாம்" என்றார்.

அவனும் நடந்தான். அவர் கைபட்ட நொடி உடம்பிலும் மின் பாய்ச்சல். ஒரே பரவசமாக இருந்தது. அந்த பரவச அனுபவத்தில் கண்கள் செருகியது. திடும்மென்று பரவச அனுபவம் உதறப்பட்டது போல வெளியேற அவனும்

அவரும் திருப்பதி மலையில் ஜனக்கூட்டத்தின் நடுவில் இருந்தார்கள்!

# 3

*உடல் என்பது பஞ்ச பூதங்களின் சேர்க்கைதான்! நிலம் நீர் காற்று நெருப்பு ஆகாயம் என்னும் ஐந்தின் நுண்ணிய அணுக்களின் சேர்க்கைதான் உடம்பு. இந்த உடம்பு ஜீவன் இடும் வேலையைச் செய்யும். அதுவும் ஒரு திடப்பொருளாக இருந்து, இது சேர்ந்திருந்தால் உடம்பு. இதையே பிரித்து உதிர்த்து விட்டால் அங்கே ஆன்மா மட்டுமே இருக்கும். ஆன்மா எதையும் ஊடுருவும்."*

*–அஷ்டமா சித்து ரகசியத்தியிருந்து*

*பா*ண்டியன் ஒருமுறை தன்னை கிள்ளிப் பார்த்துக் கொண்டான். அந்த பிச்சைக்கார திருமலைச் சாமியையும் பார்த்தான். சுற்றிலும் ஜனத்திரளால் விழிபிதுங்கும் திரு மலை கூட்டம்.

"என் சாமி... நாம இப்ப திருமலைலயா இருக்கோம்?"

"சந்தேகமாக இருக்கா... அதோ. கோவில் கோபுரம்"

"எப்படி சாமி... எப்படி இவ்வளவு சீக்கிரம் வந்தோம்.?"

"குறுக்கு வழி!"

"குறுக்கு வழியா... என்னதான் குறுக்கு வழின்னாலும் எப்படி சாமி இங்க வரமுடிஞ்சிச்சு. என்னால நம்பமுடியலையே..."

"அடப்பாவி மனுஷா. நீதானே நடந்து வந்தே. நம்பமுடியலைன்னா என்ன அர்த்தம்?" -அந்த சாமி முகத்தில் அநியாயத்துக்கு ஒரு இளக்கார புன்னகை, ஆழம் பார்க்கிற மாதிரி கூடத் தோன்றியது.

பாண்டியனுக்கு பதில் சொல்லத்தான் தெரியவில்லையே தவிர நிச்சயம் இது ஏதோ மாயம் என்கிற மாதிரிதான் உள்ளுணர்வுகள் நினைத்தன.

"பாண்டியா... ஹலோ!" குரல் ஒன்று கூட்டத்தில் இருந்து வந்தது. ராஜேந்திரன்தான். நேரமாகிவிடும். நான் போகிறேன் என்று வழியில் பாதியிலேயே பிய்த்துக்கொண்ட அதே ராஜேந்திரன்தான். ராஜேந்திரனும் அவனை சமீபித்து,

"என்னப்பா என்னை கட் பண்ணிட்டு எனக்கு முந்தி இங்க வந்து நிக்கறே? ஆமா தும்புரு தீர்த்தத்துக்கு போகலையா?"

"போனேனே... போகாம திரும்புவேனா. ஆமா நீ இப்பதான் வர்றியா?"

"நீ பார்க்க இப்பதான் வந்துகிட்டே இருக்கேன். அது சரி நீ எப்படி எனக்கு முந்தி வந்தே..?"

"அதுதான் எனக்கே தெரியல ராஜேந்திரா." -பாண்டி யனின் பதில் ராஜேந்திரனிடம் சிரிப்பைப் பிடுங்கியது. ஏதோ கேட்கக்கூடாத ஜோக்கைக் கேட்டவனாய் தோளைக் குலுக்கி சிரித்தான்.

"இல்ல ராஜேந்திரா. நான் சொல்றதுதான் உண்மை. நீ வேணா இந்த பிச்சைக்கார சாமியைக் கேளு. இவர் யார் தெரியுமா...?"

-பாண்டியன் திரும்பினான். திருமலைச்சாமி ஒரு ஓரமாய் போய் பிச்சை எடுக்க உட்கார்ந்திருந்தார். திரும் பவும் அவனுக்கு திடுக் என்று ஆனது. "இவர் முன்ன ஒத்தக்கால்ல ஆடாம அசையாம நின்னு பிச்சை எடுத்துக் கிட்டிருந்தார். இப்ப கால்வலின்னு உக்காந்துட்டாராக்கும்?"

-ராஜேந்திரனிடம் கமென்ட்.

"இல்ல ராஜேந்திரா... இவர் எனக்கு முந்தி தும்புரு தீர்த்தத்துல இருந்தார். அங்க குளிச்சிகிட்டிருந்தார். இவ ரோட சேர்ந்துதான் நான் இங்க வந்தேன். கண்மூடி கண் திறக்கறதுக்குள்ள அங்க இருந்து இங்க வந்துட்டோம். எப்படின்னு கேட்டா குறுக்கு வழியில கூட்டிகிட்டு வந்ததா சொல்றாரு."

"என்ன பாண்டியன் ஆச்சு உனக்கு. எதுக்காக இப்படி என்னை ஆழம் பாக்கறே. என் பின்னாடியே நீயும் வந்

துட்டே இங்க டவுன்ஷிப்புக்குள்ள வந்தவுடனே கூட்டத்துல எனக்கு முந்தி நடந்து என் பார்வையில பட்ருக்கே. இதான் உண்மை, எதுக்கு சும்மா பிச்சை எடுத்துக்கிட்டிருக்கற இவரை எல்லாம் இப்ப இழுக்கறே..."

-ராஜேந்திரன் நக்கலாக திருப்பிக் கேட்டான். அப்படித் தானே அவனால் கேட்கவும் முடியும்? பாண்டியனுக்குத் தலையைச் சுற்றிற்று.

ஒரு அதிசயம் நடந்திருக்கிறது. ஆனால் நிரூபிக்க முடியவில்லை. இது திருப்பதியா. இல்லை மாயலோகமா? அந்த பிச்சைக்கார திருமலைச்சாமி சித்தரும் நடு நடுவே திரும்பித்திரும்பிப் பார்த்துச் சிரித்தார். மீண்டும் பாண்டியன் அவர் அருகே சென்றான். அவர் விரித்திருந்த துண்டில் சில்லரைகள் விழுந்திருந்தன.

"என்ன பாக்கறே?"

"பாக்கறேன்னா... தலையை பிச்சுக்கலாமான்னு இருக் குது."

"பிச்சுக்கோ..."

"அது சரி... இப்படி பிச்சை எடுத்து உண்டியல்ல போட்றதுதான் என் நேர்த்திக்கடன்னு சொன்னீங்களே. இப்ப இந்த காசெல்லாமும் உண்டியலுக்குத்தானா?"

"பின்ன?"

"நான் நம்பமாட்டேன்..."

"சரி... நம்பாதே... போ..."

-பின்னால் வந்து நின்ற ராஜேந்திரன் குறுக்கில் நுழைந் தான்.

"பாண்டியா... வா போகலாம். இங்க இந்த ஆள்கூட என்ன பேச்சு?"

"இரு ராஜேந்திரா... சாமி நீங்க சொல்லுங்க, எனக்கு இப்ப ஒரே குழப்பமா இருக்கு. நீங்க பதில் சொன்னாத்தான் விடுவேன்."

-திருமலைச்சாமி முகத்தில் திரும்பவும் கேலிச் சிரிப்பு.

"ஆமா உண்மையைச் சொல்லுங்க. நீங்க யாரு?"

"நீ யாருன்னு நினைக்கறியோ. அதுதான் நான்!"

"என்ன சாமி... விளையாட்றீங்களா? நான் இப்ப உங்களை அந்த திருப்பதி வெங்கடாஜலபதியா நினைச்சா நீங்க அந்த சாமியாயிடுவீங்களா?"

"ஓ... ஆவேனே...!"

-பதில் சொன்ன மறுநொடி அவர் அமர்ந்திருந்த இடத் திலேயே உள்ள திருச்சன்னதியில் கோலாகலமாய் ஆபரணங்கள் சூடி நெற்றி நிறைய நாமத்துடன் காட்சி தரும் அந்த வேங்கடவன் அங்கே பாண்டியன் கண்ணுக்கு அந்த

இடத்திலேயே தெரிந்தான். காதிலும் பக்தர்களின் உணர்ச்சிமயமான கோவிந்த கோஷம். பாண்டியனுக்கு உடம்பெல்லாம் சிலிர்த்துவிட்டது. கண்களில் விரிவு, மூச்சுக் காற்றில் படபடப்பு. உடம்பிலும் பரவசமான பரவசம்.

தன்னையும் அறியாமல் கைகளைக் கூப்பினான். உதடு களும், "கோவிந்தா... கோவிந்தா..." என்று கோஷம் எழுப் பின.

உடன் நின்று கொண்டிருந்த ராஜேந்திரனுக்கு எல்லாமே வேடிக்கையாக, வியப்பாக இருந்தது.

அவன் வரையில் திருமலைச்சாமி ஒரு பிச்சைக் காரனாகத்தான் தெரிந்து கொண்டிருந்தார்.

கோஷம் போட்ட பாண்டியன் அப்படியே சாஷ்டாங் கமாக திருமலைச்சாமி காலிலும் விழுந்தான்.

ராஜேந்திரனுக்கு எல்லாமே வியப்பாக இருந்தது. பாண் டியனுக்கு கிறுக்கு பிடித்து விட்டதா? ராஜேந்திரன் விழுந்த நிலையில் இருந்து எழவே யில்லை. பாண்டியன்தான் எழுப்பி விட்டான். "என்னப்பா நீ... உனக்கு என்ன ஆச்சு. எதுக்கு இந்தப் பிச்சைக்காரன் கால்ல விழறே" என்று கேட்கும்போதுதான் அங்கே திருமலைச்சாமி உருவம் பழைய விதமாகத் தெரிந்தது. அதுவும் கேலிச் சிரிப்போடு.

"சாமிஈஈஈ.."

"போ... போய்ட்டு அப்புறமா வா."

"அப்புறம் நான் வருவேனா."

"வருவே... வரணும்!"

"நீங்க..."

"நான் இங்கதான் எங்கையாவது சுத்திக்கிட்டு இருப் பேன். என்னை நினைச்சாலே போதும். உன் கண்ணுல பட்டுடுவேன். இப்ப இவனை கூட்டிக்கிட்டுப்போ..." - திருமலைச்சாமி தோளைத் தட்டியபடியே சொல்லி விட்டு அங்கிருந்து மறைந்தும் போனார். ராஜேந்திரனுக்கு இப் போது குழப்பமாகிவிட்டது. "ஏப்பா பாண்டியா... இந்த ஆள் என்ன சொல்றான். நீ என்ன பண்றே. எனக்கு எதுவுமே புரியலப்பா.."

"இல்ல ராஜேந்திரா... இவர் அசாதாரணமான ஆள். இவர்தான் அந்த திருப்பதி பெருமாளே!"

"என்னப்பா உனக்கு மரைகிரை கழண்டுபோச்சா? சாமியே இல்லேங்கற பார்ட்டி நீ... நீ போய் இந்த ஆளை திருப்பதி சாமிங்கறே. என்ன ஆச்சு உனக்கு?"

"எனக்கு மரை கழலலை ராஜேந்திரா. இப்பதான் கழண்டு கிடந்தது சரியாக ஆரம்பிச்சிருக்கு. இல்லேன்னா எனக்கு அந்த பெருமாளோட தரிசனம் கிடைக்குமா?"

''பெருமாள் தரிசனமா. இந்த ஆள் கால்ல விழுந்து கோவிந்தா கோவிந்தான்னு கத்திகிட்டு இந்த ஆளையே நீ அந்த பெருமாள்னு சொல்றியா?''

"அடப்பாவி. நீ பார்க்கலையா? சங்கு சக்கரத்தோடு, கழுத்துல மாலையோட சாமி இப்ப உன் கண்ணுக்கு தெரியல."

"சரி... உனக்கு ஏதோ ஆகியிருக்கு, டாக்டர்கிட்ட காட்ட வேண்டியதுதான்."

"அடப்பாவி... நான் புல்லரிச்சுப் போய் கிடக்கேன், என்னைப் போய் டாக்டர்கிட்ட காட்டணும்கிறியே.

"சரி... சரி.... கோவிச்சுக்காதேவா போவோம்." ராஜேந்திரன் நிதானமாய் அவனை அழைத்துக் கொண்டு நடந்தான்.

# 4

***அணிமா கைவரப் பெற்றவர்களால் இந்த உலகம் அதிசயம் என்று கருதும் பல விஷயங்களை கடினப் பொழுதில் செய்ய முடியும். ஆனால் கைவரப்பெறுவது என்பதுதான் இதில் முக்கியம். எண்கள் என்பது ஒன்றில் இருந்து ஒன்பதுக்குள் தான் உள்ளது. ஆனால் இதைப்***

*பயன்படுத்தியே பல கோடிகளை நாம் எண்ணுகிறோம். இதைப் பயன்படுத்தியே கூட்டு கிறோம், கழிக்கிறோம், வகுக்கிறோம், பெருக்குகிறோம். எண்கள் பற்றி தெரிந்து விட்டால் அதைக் கூட்டிக் கழிக்க வகுத்துப் பெருக்கத் தெரிந்து விட்டால் கணக்கு நமக்கு ஒரு கஷ்டமான விஷயமில்லை, பத்தாயிரம் கோடியைக் கூட கூட்டிக்கழித்து மிச்சம் மீதிகளைப் பார்த்து விடுவோம். அதேபோலத் தான் அணிமாவின் அடிப்படையான உடற் கூறுகளை பஞ்சபூத நுண்ணுயிர்களைப் புரிந்து கொண்டு அதைச் சேர்ப்பதும் பிரிப்பதும்."*

*-அஷ்டமா சித்து ரகசியத்திலிருந்து.*

இரவு பதினொன்றாகிவிட்டது.

எல்லோரும் அவரவர் அறைக்கு திரும்பி படுக்கவும் தயாராகிக் கொண்டிருந்தனர்.

பாண்டியன் மட்டும் தூக்கம் வராமல் அந்த பிரமிப் பிலேயே இருந்தான். ராஜேந்திரனுக்கு வேடிக்கையாகவும் இருந்தது. வேதனையாகவும் இருந்தது. எல்லோரும் வந்து விட்டார்களா என்று பார்ப்பதற்காக ஒவ்வொரு அறையாக சோதித்தபடி வந்து கொண்டிருந்தார் அக்கவுண்டன்ட் ஆனந்தமூர்த்தி. அவருடன் ரங்கபாஷ்யமும் வந்து கொண் டிருந்தார். பாண்டியனையும் ராஜேந்திரனையும் பார்த்தவர்

அவர்கள் அமைதியாக உட்கார்ந்து கொண்டிருப்பதைப் பார்த்து ஆச்சரியப்பட்டுப் போனார்.

"நீங்க தண்ணி போட்டுட்டு சுருண்டு கிடப்பீங்கன்னு நினைச்சா, முட்ட முட்ட முழிச்சுகிட்டு உக்காந்துகிட்டு இருக்கீங்களே."

"அத ஏன் சார் கேக்கறீங்க... பாண்டியனுக்கு என்ன ஆச்சுன்னே தெரியல. ஒரே உளறல் சார்."

"உளறலா... தண்ணி ஓவரா அடிச்சிட்டாரா. என்ன பாண்டியன். இங்க வந்துமா இந்த விளையாட்டெல்லாம். இது க்ஷேத்ரம்யா. கொஞ்சம் சும்மா இருக்கக் கூடாதா?"

"ஐய்யோ சார்... நாங்க தண்ணியெல்லாம் அடிக்கல. நான் உளறல்னு சொன்னது வேற ஒரு விஷயத்தை." ராஜேந்திரன் ஆனந்த மூர்த்தியை தனியாக தள்ளிக் கொண்டு போனான். ஒட்டிக்கொண்டு நடந்தார் ரங்க பாஷ்யம். இருவரிடமும் தும்புரு தீர்த்தம் வரை போக ஆசைப்பட்டதையும், பாதியிலேயே திரும்பியதையும் பாண் டியன் மட்டும் அங்கு போக முயற்சி செய்ததையும் விலாவாரியாக சொன்னவன் கடைசியாக திருமலைசாமி காலில் விழுந்து "கோவிந்தா கோவிந்தா" என்று கூக்குரல் இட்டதையும் சொல்லிமுடித்து இருவரையும் பார்த்தான்.

"என்ன இது... பயங்கர பைத்தியக்காரத்தனமா இருக்குதே. ஆமா அவர் மத்த விஷயத்துல எல்லாம் நார்மலா இருக்காரா?" -ஆனந்த மூர்த்திதான் அப்படிக் கேட்டார்.

"நான் ஐந்து மணி நேரம் லைனில் நின்றும் ஒரு நிமிஷம் சாமிய பார்க்க முடியல. இத்தனைக்கும் நான் அந்த பெருமாளோட அத்யந்த பக்தன். சனிக்கிழமை தவ றாம விரதம் வேற இருக்கேன். எனக்கு தரிசனம் தராத பெருமாள் இவனுக்கு நடுத்தெருவுல தரிசனம் தந்தாராமா? பேத்தல்... பேத்தல்.. அசுரப் பேத்தல்..."

ரங்கபாஷ்யம் வேறு சுருதி கூட்டினார்.

"ஏன் சார் கேக்கறீங்க... தலைலகிலைல அடிபட்டு ஏதாவது ஆச்சான்னு தெரியல." -ராஜேந்திரன் வருத்தப் பட்டான்.

"நானே பேசிப்பார்க்கறேன்." -ஆனந்தமூர்த்தி வெளியே இருந்து திரும்ப உள்ளே வந்தார். அந்த அறையின் ஜன்னல் திறந்திருக்க அதன் வழியாக கோவிலின் தங்க விமானம் தகதகவென்று ஜொலித்தபடி மின்னிக் கொண்டி ருந்தது.

யார் பார்த்தாலும் ஒரு க்ஷணம் ஆன்மா துடிக்கும் அப்படி ஒரு காட்சி. இதில் இந்து முஸ்லிம் கிறித்துவ பேதமே தோன்றாது. தெய்வாம்சம் ஒளிவெள்ளத்தில் ஜொலிக்கும் ஒரு இடமாக தங்கக் கோபுரம் இருக்க பாண்டியனின்

பார்வை அங்கே பதிந்திருந்தது.

ஆனந்த மூர்த்தியும் ரங்கபாஷ்யமும் கூட அதைப் பார்த்து கன்னத்தில் போட்டுக் கொண்டனர். ராஜேந்திரன் அவர்கள் உள்ளே வரவும் கதவை அடைத்து தாழ் போட் டான்.

ஆனந்தமூர்த்தி பாண்டியனின் தோளைத் தொட்டார்.

"மிஸ்டர் பாண்டியன்."

-அவனும் திரும்பினான்.

"என்ன ஆச்சு உங்களுக்கு?"

"எனக்கு எதுவும் ஆகலையே. எதுக்காக இப்படி கேக்கறீங்க?"

"ராஜேந்திரன் உங்களைப் பத்தி என்னென்னவோ சொன்னாரே..."

''என்ன சொன்னார்.?"

''சம்திங் ராங்... உங்களுக்கு தலைல எதாவது அடிகிடி பட்டுடுச்சா..."

"ப்ளீஸ் சார்... என்ன கேள்வி இது. உங்க கேள்வியே அபத்தமா இருக்கு. எனக்கு தலைல அடிபட்டிருந்தா, அதனால சித்தம் கலங்கியிருந்தா உங்க கேள்விக்கு நான் ஆமாம் சார் அடிபட்டு எனக்கு புத்தி கலங்கிப் போச் சுன்னா

சொல்வேன். இந்த நிமிஷம் உங்களைப் பாத்து இப்படியா பேசிகிட்டிருப்பேன்."

-மிகத் தெளிவாக அவன் கேட்ட கேள்வி ஆனந்த மூர்த்தியை ராஜேந்திரனைப் பார்க்கவிட்டது.

"சார்.. சாமியை பாத்தியா, எங்க பார்த்தேன்னு கேளுங்க அப்ப தெரியும்." -ராஜேந்திரன் எடுத்துக் கொடுக்க பாண்டியனுக்கு கோபம் வந்தது.

"ராஜேந்திரன்... சும்மா இருய்யா நீ. நீ எதுக்குய்யா அதையெல்லாம் இவங்ககிட்ட சொல்றே. கூட இருந்த நீயே நம்பலை. இவங்கதானா நம்பப்போறாங்க?"

"மிஸ்டர் பாண்டியன். அவரை ஏன் கோவிக்கறீங்க. எங்ககிட்ட பேசுங்க. உங்களுக்கு என்ன ஆச்சு?"

"என்ன ஆச்சுன்னா..?"

"ஏன் இப்படி எல்லாம் பேசறீங்க?"

"இல்ல. நீங்க வழக்கமான பாண்டியனா இல்லை. உங்ககிட்ட நிறைய மாற்றங்கள் தெரியுது."

"ஆமாம் நான் நிறைய மாறிட்டேன். அதுல உங்க ளுக்கு சந்தேகம் வேண்டாம். நான் மாறினதால உங்களுக்கு ஒண்ணும் பாதிப்பில்லையே?"

"அத இப்ப எப்படி சொல்ல முடியும் பாண்டியன். நீங்க

பேசறதப் பார்த்தா தெளிவா இருக்கற மாதிரி இருக்கு. இவர் சொல்றதை எல்லாம் கேட்டா நம்ப முடியல.''

"வேண்டாம் சார். நம்பாதிங்க. இவர் சொன்னதெல்லாம் பொய்யாவே இருக்கட்டும். நான்தான் பொழுது போகாம பொய் சொன்னேன்னே இருக்கட்டுமே. ப்ளிஸ் கொஞ்சம் என்னைத் தனியா விட்றீங்களா?"

பாண்டியன் முடிவாக கைகளை உதறிக் கொண்டு கத்தி னான். ஆனந்தமூர்த்தியும் ரங்கபாஷ்யமும் மிரள மிரளப் பார்த்துக் கொண்டனர்.

ராஜேந்திரனுக்கு என்னவோ போலாகிவிட்டது.

அவனும் பதிலுக்குக் கத்தினான்.

"பாண்டியன், இப்ப என்ன கேட்டுட்டுட்டாங்கன்னு இப்படி பேசறே... சார் யாரோ இல்ல. நம்ம பேங்க் அக்கவுண்டண்ட். இந்த டூருக்கு பொறுப்பாளி. அவருக்கு அக்கறை இருக்கு. உனக்கு வந்த இடத்துல எதாவது ஒண்ணுன்னா யார் பதில் சொல்றது...?"

"எனக்கு இப்ப என்ன ஆயிடிச்சு. நான் நல்லாதானே இருக்கேன்?" -மீண்டும் பலமான குரல் பாண்டியனிடம்.

"எங்க நல்லா இருக்கே? ரோட்ல ஒரு பிச்சைக்காரர் கால்ல விழறே. அவரை திருப்பதி சாமிங்கறே. கோவிந்தா

கோவிந்தாங்கறே..."

"இதோ பார் ராஜேந்திரன் அவர் பிச்சைக்காரர் இல்ல. அவர் ஒரு சித்த புருஷர். அவர் மனசு வெச்சா பணமெல்லாம் சுண்டக்கா..."

"அப்படியா... அதான் நாலணா எட்டணாவுக்கெல்லாம் பிச்சை எடுக்கறாரா?"

"அவர் பிச்சை எடுக்கறது நேர்த்திக் கடனுக்காக..."

"பாண்டியா... நீயா இதை நம்பறே... நிஜமா நேர்த்திக் கடனுக்கு பிச்சை எடுத்தாலே சந்தேகப்பட்டு இதெல்லாம் அலட்டல்னு சொல்ற நீயா இதை நம்பறே?"

"இல்ல ராஜேந்திரா... அவர் பிச்சைக்காரர் இல்லை. அவர் அசாதாரண மனுஷர். நான் எப்ப நினைக்கறேனோ அப்ப என் எதிரே வருவதாகச் சொல்லிட்டுப் போயிருக்கற ஒரு அசாதாரண மனுஷர் அவர்."

-பாண்டியனின் பதிலும் ராஜேந்திரனின் கேள்வியும் ஆனந்தமூர்த்தியை ரங்கபாஷ்யத்தைப் பார்த்து நெற்றிப் பொட்டு அருகே ஆட்காட்டி விரலைச் சுற்ற விட்டன.

"சந்தேகமில்ல... இந்த பாண்டியனுக்கு மரைதான் கழண் டிருக்கு" என்பது அதன் உட்பொருள். பாண்டியனும் அதைப் பார்த்துவிட்டு மேலும் கோபமானான். அக்கவுண் டண்ட் சார். என்ன? என்னைப் பைத்தியம்னு முடிவு பண்ணிட்டீங்களா?

சில பரவசங்களை அனுபவிச்சாதான் சார் தெரியும். நான் அனுபவிச்சவன். நீங்க யாரும் அனுப விக்காததை அனுபவிச்சவன் சார் நான்" -என்று நெஞ்சை நிமிர்த்தினான்.

"நீ எதையும் அனுபவிக்கலே பாண்டியா. பதட்டப் படாம சொல்றத கேளு. அந்த பிச்சைக்காரன் உன்னை என்னவோ செய்துட்டான்."

"இல்ல... அவர் அப்படிப்பட்டவர் இல்லை. இப்ப நான் கூப்பிட்டா இங்க வருவாரு. பாக்கறியா?"

"எங்கே கூப்பிடு பார்க்கலாம்?"

"சாமிஈஈ. வாங்க சாமி. இவனோட தொல்லை தாங்க முடியலை, என்னை பைத்தியம்னு நினைக்கறாங்க சாமி. வாங்க சாமிஈஈஈ..."

-பாண்டியன் சின்னக் குழந்தை போல கேவியபடியே வெளியே ஜன்னல் வழியாகப் பார்த்தான். அடுத்த நொடி டொக்... டொக்... சப்தம்.

போய் கதவைத் திறந்த ராஜேந்திரனுக்கு சுரீர் என்றா னது. கதவுக்கு அந்தப் பக்கத்தில் திருமலைச் சாமி.

"என்னைக் கூப்பிட்ட மாதிரி இருக்கே?" - அவரிடம் கேள்வி வேறு. ஆனந்தமூர்த்தியும், ரங்கபாஷ்யமும் கூட வந்து பார்த்து ஆச்சரியப்பட்டனர். பாண்டியன் மட்டும்

பரவசத்தின் உச்சிக்கே போன மாதிரி தெரிந்தான்.

"சாமிஈஈ... வந்துட்டீங்களா... எனக்குத் தெரியும் நீங்க வருவீங்கன்னு. ஏய் ராஜேந்திரா இப்ப என்ன சொல்றே?"

"ஆமா... இவன்தான் அந்த பிச்சைக்காரனா?" - ரங்க பாஷ்யத்திடம் ஏளனமாய் கேள்வி. திருமலைச்சாமியும் அதைக் கேட்டு சிரித்தவராய் "நான் பிச்சைக்காரன்தான். நானே பிச்சைக்காரன்னா நீ யாரு?" -என்று திருப்பிக் கேட்டார்.

"ஆனந்த மூர்த்தி... வாங்க நாம போவோம். இந்த ஆளைப் பார்த்தாலே எனக்கு ஓமட்டிக்கிட்டு வருது. மிஸ்டர் பாண்டியன். உங்களை நினைச்சா எனக்கு அழ றதா சிரிக்கறதான்னே தெரியல..."

ரங்கபாஷ்யத்தையும் ஊன்றிப் பார்த்தவர், "இப்ப என்ன எதுக்குப்பா கூப்பிட்டே?'' என்று பாண்டியன் பக்கம் திரும்பினார்.

"சாமி... இவங்க நான் உங்களை மதிச்சுப் பேசறத தாழ்வா நினைக்கறாங்க. என்னோட அனுபவங்களை நம் பாம என்னை பைத்தியம்னு சொல்றாங்க சாமி.''

"அப்படியா... சரி... உன்னை இனி யார் என்ன சொல்றாங்களோ சொல்றமாதிரியே அவங்க ஆயிடுவாங்க. நீ கவலைப்படாதே..." சாதாரண முறையில் சொல்லிவிட்டு

திரும்பி நடந்தார் திருமலைச்சாமி. ஆனந்தமூர்த்தியும், ரங்கபாஷ்யமும் தலை யில் அடித்துக்கொண்டனர்.

"ராஜேந்திரன், இனியும் நாம இங்க இருந்து இவர்கிட்ட பேசினா அந்த பிச்சைக்காரன் சொன்ன மாதிரி இவருக்கு பைத்தியம் பிடிச்சிருக்கோ இல்லையோ நமக்கு பிடிச்சிடும். தயவுசெய்து ஊருக்குப்போய் வீட்ல அடையறவரையாவது அவரை பத்ரமா பார்த்துக்குங்க. அப்புறம் எக்கேடோ கெட்டுப் போகட்டும்" -என்றபடியே கிளம்பியும் சென்றனர். ராஜேந்திரன் பார்வை பாண்டியனை துளை போட்டது. ஆனால் எதிர்த்து கேள்வி கேட்கத்தான் தைரியம் வரவில்லை.

# 5

***நம் கண்ணால் பார்க்க முடிந்ததை விட பார்க்க முடியா தவையே அதிகம் இந்த உலகில் இறைந்து கிடைக்கின்றன. வெளிச்சம் இருந்தால் பார்க்க முடிவதும், திடமான வாஸ்த்துக்களை அறிவதும் பெரிய விஷயமே இல்லை. இது அடிப்படை சக்தி. சித்துக்களால் இந்த சக்தியை பல மடங்கு பெருக்கிக் கொள்ள முடியும். அப்படிச் செய்ய முற்படும்போது இப்போதிருக்கும் கண்களாலேயே இன்னும் நுட்பமானதை நாம் பார்த்தறிய முடியும்.***

*ஓர் இடத்தில் தன்னந்தனியே ஒருவன் அமர்ந்திருத்தான். அந்த பக்கமாய் வந்த ஒரு முனிவரைப் பார்த்து வணங்கினான். அவரிடம் பொழுது போகவில்லை என்றும் கூறினான். அவரோ அதைக்கேட்டு சிரித்தார். உன்னைச் சுற்றி ஓராயிரம் புதிய விஷயங்கள் இருப்பது உன் கண்ணில் பட்டால் நீ இப்படி என்னை அழைக்க மாட்டாய் என்றவர் அவனை அழைத்து நெற்றிப் பொட்டினை வருடி தன் சக்தியை அவன் கண்களுக்கு ஏற்ற அந்த க்ஷணம் அவன் பார்த்த ஆகாயத்தில் ஆயிரமாயிரம் தேவர்களும் தேவதைகளும் எங்கெங்கோ போய்க் கொண்டிருந்தார்கள்! பூமியில் உள்ள மரம் செடி கொடிகள் எல்லாம் சூரியனைப் பார்த்துப் பேசி தங்களுக்கான பழங்களையும், காய்களையும் உருவப் படுத்திக் கொண்டிருந்தன. அவர் கையை விலக்கினார். அவனுக்கும் பார்வையை விட்டு எல்லாமே விலகி பழைய காட்சிகளே தெரிந்தன!"*

*-அஷ்டமா சித்து ரகசியத்திலிருந்து.*

**ம**றுநாள் காலை பத்து மணி!

பஸ்ஸில் எல்லோரும் ஏறி அமர, திட்டமிட்டபடி பஸ்ஸும் புறப்பட்டது.

கலகலப்பாய், பித்தளைக் குடத்துக்குள் விழுந்து விட்ட கோலிகுண்டு கணக்காய் சதா பேசிக்கொண்டும் சீண்டிக் கொண்டும் வந்த பாண்டியன் நேர் எதிராக மாறி ஒரு

மௌன விரதக்காரனைப் போல திருமலையையே பார்த்த படி பஸ்ஸில் அமர்ந்திருந்தான்.

அவனுக்கு ஏதோ ஆகிவிட்டதாக அதற்குள் எல்லோர் காதுக்கும் விஷயம் போய்விட்டது.

பஸ்ஸுக்குள்ளும் பாண்டியனைப் பற்றித்தான் எல்லோ ரிடமும் பேச்சு, சிலர் கேள்விப்பட்ட விஷயத்துக்கு கைகால் மூக்கு வைத்து தலை சீவி ஜடை போட்டு பூவே வைத்து விட்டனர்.

"என்னய்யா ஆச்சு இந்த ஆளுக்கு. சாமியாவது பூதமாவதுன்னு நம்ம நம்பிக்கைகளை கேலி பண்ற ஆளா இவன்?"

"அதானே. திருப்பதி சாமி நேர்ல வந்து தரிசனம் கொடுத்தாராமே?''

"இருக்கும்... இருக்கும்... அந்த சாமியோட திருவிளை யாடலை எல்லாம் நம்மால எடை போட முடியுமா? ஹும்.. பல தடவை மலைக்கு வந்த என்மேல் சாமிக்கு கருணை இல்லை. ஆனா இவன் மேலே அதுக்கு என்ன ஒரு கருணை பார்த்தியா?''

"அட நீ வேற... எல்லாம் கப்ஸா! பாண்டியன் சும்மா நடிக்கறான். இது ஏதோ நாடகம்."

"அதெல்லாம் இல்ல. ஒரு சாமியார் அவனை கூட்டி கிட்டு போய் இந்த திருப்பதி முழுசையும் பறந்தே சுத்திக் காமிச்சு இருக்காரு."

"பறந்தா... என்னய்யா உளர்றே?"

"அந்த சாமியாருக்கு பறக்கற சக்தி இருக்குதாம், உனக்கு தெரியாது. அவர் பெரிய சாமியார்."

"யப்பா... காலத்துக்கு தகுந்தா மாதிரி யோசியுங்கப்பா. மனுஷங்களால பறக்க முடிஞ்சா ஏரோப்ளேனும் ஹெலி காப்டரும் எதுக்கு.?"

"மொத்தத்துல எதோ ஒண்ணு நடந்துருக்குது.என்னன்னு தெரியல. பாண்டியன் சாதாரண ஆள் கிடையாது. பாண்டி யனே சும்மா வாயை மூடிக்கிட்டு வராருன்னா நிச்சயம் பெரிசா ஏதோ நடந்துருக்குது..."

-ஓடிக்கொண்டிருக்கும் பஸ்சுக்குள் பஸ்ஸின் வேகத்தை விட வேகமான கற்பனைகள்! யூகங்கள்! நம்பிக்கைகள்.

ஆனால் பாண்டியன் எதையும் காதில் வாங்கிக் கொள்ளவே இல்லை. மௌனமாக அந்த ஏழுமலையைப் பார்த்தபடி அமர்ந்திருந்தான். அருகிலேயே ராஜேந்திரன், அவனிடமும் ஒருவித மௌனம்.

ஆனால் மற்றவர்களைப் போல் இல்லாத ஒருவித அர்த்தமுள்ள மௌனம்.

ஞாபகமாக பஸ் முழங்கால் மடிச்சு மலைப் பகுதி அருகே திரும்பும்போது முன்பு சிறுத்தையோடு கண்ணில் பட்ட மனிதன் தெரிந்த அந்த மலைப் பகுதியைப் பார்த் தான்.

அவன் ஏமாறவேயில்லை!

மீண்டும் அந்த மனிதர் தெரிந்து தெரிந்த வேகத்தில் மறைந்தார். பக்கென்றது!

அபூர்வமான அனுபவம், வெளியில் சொன்னால் தன் னையும் பாண்யனின் லிஸ்ட்டில் சேர்த்து விடுவார்கள் என்பதால் மனதுக்குள் அடக்கிக் கொண்டான். பாண்டி யனின் அனுபவம் ஒருவேளை உண்மையானதாக பவித்ர மானதாக இருக்குமோ?

அந்த திருமலைச்சாமி என்கிற பிச்சைக்கார மனிதர் நிஜமாலுமே அபூர்வ மனிதரோ. இப்படிப்பட்ட மனிதர்களை சித்தர்கள் என்பார்கள் சிலர். சிலரோ மாயாவிகள், மோடி வித்தைக்காரர்கள் என்பார்கள். இந்த பட்டியல்ல அவர் யாராக இருப்பார்?

ராஜேந்திரனும் கேள்வியில் விழுந்து பதில் பிடிபடாமல் நெளிந்து கொண்டிருந்தான்.

ஒரு உல்லாசச் சுற்றுலா இப்படி எல்லாம் அனுபவங் களைத் தருமா என்ன?

திருப்பதி சென்று திரும்பி வந்தால் திருப்பம் நேரும்

என்பார்கள். அது இப்படிப்பட்டதுதானா?

இந்த திருமலையில் இன்னும் இதுபோல எத்தனை புதிர்கள் இருக்கின்றன.?

கேள்விக் குமைச்சலுக்கு நடுவில் பஸ் அடிவாரத்தைத் தொட்டு காளஹஸ்தி சாலையில் திரும்பியிருந்தது. அடுத்த மூன்றாவது மணி நேரத்தில் சென்னை சென்று விடும்.

அதன்பின் வழக்கமான இயல்பு வாழ்க்கையும் ஆரம்ப மாகி விடும். இந்த அனுபவங்கள் அந்த வாழ்க்கையில் என்ன செய்யப் போகிறதோ?

***ம***ந்தைவெளி!

வீட்டு முன்னால் நின்ற ஆட்டோ பாண்டியனை உதிர்த்து விட்டு காசை வாங்கிக் கொண்டு கிளம்பிப் போனது. உள்ளே நுழைந்தவனை பாண்டியனின் மனைவி மஞ்சுளா வரவேற்று ஆக்ரமித்துக் கொண்டாள். மூன்று வயதுப் பெண் குழந்தை பானு தூங்கிக் கொண்டிருந்தது.

"எப்படிங்க இருந்தது டூர்?" மஞ்சுளா விசாரிக்கத் தொடங்கினாள்.

"உம்!"- பாண்டியனிடம் ஆமோதிப்பு மட்டும்.

"எப்படியோ... எங்களை விட்டுட்டு நீங்க மட்டும் போய்ட்டு வந்துட்டீங்க"

"உம்!"

"ஒண்ணும் சிரமமெல்லாம் இல்லியே.?''

"உம்?"

''என்னங்க. நான் எதைக் கேட்டாலும் உம்.. உம்முன்னு கிட்டு. வாயத்திறந்து பேசமாட்டீங்களா?"

"உம்!" அவளது அந்தக் கேள்விக்கும் அவனிடமிருந்து உம்தான் பதில், பதிலோடு சூட்கேஸைத் திறந்தான். உள்ளே இருந்து திருப்பதி பெருமாளின் புதிய படம் ஒன்றை வெளியில் எடுத்தான்.

அதை மஞ்சுளாவும் ஆச்சரியமாகப் பார்த்தாள்.

"என்னங்க இது சாமி படம். யாருக்கு?"

அவள் கேள்வியில் அது தன் குடும்பத்துக்காக இருக்காது என்னும் தீர்மானம். அவன் அதைக் கேட்டு மெலிதாக சிரித்தான். பின் "நமக்குத்தான்." என்றான்.

"நமக்கா... நிஜமாவா?''

"உம்!"

"ஆச்சரியமாயிருக்கே. நீங்க வாங்கினீங்களா இல்லை யாராவது வாங்கிக் கொடுத்தாங்களா?''

அவள் கேள்விகளுக்கு பதில் சொல்லாமல் படத்தை

எடுத்துக் கொண்டு சமையல் கட்டுப் பக்கம் சென்றான். அங்கேதான் ஒரு பிறையில் சில சாமி படங்களையும் வைத்து மஞ்சுளா வழிபட்டுக் கொண்டிருந்தாள். அங்கே கொண்டு சென்று படத்தை வைத்தவன் எட்ட நின்று ஒரு பார்வை பார்த்தான். பிறகு திரும்பி வந்து குழந்தை பானுவுக்காக வாங்கி வந்திருந்த பொம்மைகளை வெளியே எடுத்துப் போட்டான்.

குழந்தை படுக்கையில் ஒரு பக்கமாய் ஒருக்களித்து படுத்துக் கொண்டிருந்தது. பொம்மையைப் பார்த்தவள் அதற்காக சந்தோஷப்படாமல் அவன் சாமி படத்தை வாங்கி வந்ததிலேயே குறியாக இருந்தாள். தனக்கு என்ன வாங்கி வந்தாய் என்றுகூட கேட்கவில்லை.

"ஆமா, சாமி படம் யார் வாங்கினதுன்னு கேட்டேன்ல." என்றுதான் கேட்டாள்.

"நான்தான்!"

"ஆச்சரியமாயிருக்குதே."

"சரி சரி... வென்னீர் வை. குளிச்சிட்டு பூஜை பண்ண ணும்" -அவள் அவன் பதிலால் மேலும் அதிர்ந்தாள்.

"என்னாச்சுங்க உங்களுக்கு?"

"தொணதொணன்னு கேள்வி கேட்காதே மஞ்சு. நான் இப்ப பழைய பாண்டியன் இல்ல. அவ்வளவுதான் சொல்

வேன். வென்னீர் வை. நான் வந்துடறேன்" அவன் டாய்லெட் நோக்கி செல்லத் தொடங்க மஞ்சுவை அதிர்வும் ஆச்சரியமும் ஆக்ரமிக்க நடுவில் தொலைபேசிச் சிணுங்கல். போய் காதைக் கொடுத்தாள்.

"தங்கச்சி... நான் ராஜேந்திரன் பேசறேம்மா..."

"சொல்லுங்கண்ணே... எப்படி இருந்துச்சு டூர்?"

"டூர்லாம் நல்லாதான் இருந்துச்சு. ஆமா பாண்டியன் என்ன பண்ணிகிட்டிருக்கான்?"

"பாத்ரூம் போயிருக்காரு. ஒரு ஆச்சரியம் பாருங்கண்ணே, திருப்பதி சாமி படம்லாம் வாங்கிகிட்டு வந்துருக்காரு."

"அதெல்லாம் ஒண்ணும் ஆச்சரியமில்லம்மா. அவனை கவனிச்சியா? ஆள் அடியோட மாறின மாதிரி தெரியுமே?"

"ஆமாண்னே. அவரே கூட அப்படித்தான் சொன்னாரு. லொட லொடன்னு பேசறவர் வந்ததுல இருந்து உம் உம்முன்னு ஒரு வார்த்தையிலேயே பதில் சொல்லிகிட்டு இருக்கார். போன இடத்துல என்னண்ணே நடந்துச்சு?"

"அதெ சொல்லத்தான் நான் போன் பண்ணேன். திருப்பதி போறவரை ஒரு பிரச்சினையுமில்ல. திருப்பதி யிலதான் எல்லா மாயஜாலமும் ஆரம்பமாச்சு!"

"என்னண்ணே சொல்றீங்க?"

"அதுசரி... திருப்பதியில சாமியவே நேர்ல பார்த்ததா ஏதாவது சொன்னானா?"

"திருப்பதி சாமியை இவர் நேர்ல பார்த்தாரா. என்ன ண்ணே சொல்றீங்க?"

"பதட்டப்படாதே... எனக்கும், உனக்கு எப்படி சொல்லி புரியவைக்கறதுன்னு தெரியல."

"என்னண்ணே... ஏதாவது நடக்கக் கூடாதது நடந் துடிச்சா?"

"நடக்கக்கூடாததா... இல்லை நடக்க வேண்டியதான் னுல்லாம் எனக்கு சொல்லத் தெரியலம்மா. எனக்கும் கூட விசித்திரமான அனுபவம்லாம் ஏற்பட்டது. ஆனா உன் புருஷனுக்கு ஏற்பட்ட அனுபவம் மாதிரி கிடையாது."

"என்ன அனுபவம்ண்ணே அது. திருப்பதி போய்ட்டு வந்தா நல்லதுன்னுதானே சொல்வாங்க?"

"நான் விவரமா அப்புறமா வந்து நேர்ல சொல்றேன். அவனை கவனி. அவன் டோட்டலா மாறிட்டான். எதுவுமே பேசமாட்டேங்கறான். அவன் பழைய பாண்டியனா மாற ணும். அதுக்கு உன்னால முடிஞ்சதை பண்ணு. புத்தி பிசகினவன் மாதிரி ஏதாவது செய்தா டாக்டர்கிட்ட காட்ட யோசிக்காதே. தலைல அடிபட்ருக்கலாம்கறது எங்க எல்லா

ரோட யூகம்."

"ஐய்யய்யோ... தலைல அடியா. அப்ப ஏதாவது விபத்தா, பாத்தா அப்படி தெரியலியே. நல்லாதானே இருக் காரு."

"இது உள்காயமா இருக்கலாம்னு நினைக்கிறோம். ஜாக்ரதை, நான் சொன்னதை ஞாபகம் வெச்சுக்கோ. அவன் விபரீதமா ஏதாவது பேசினா, நடந்துகிட்டா டாக்டர் கிட்ட காட்டு, அதுக்குதான் முக்கியமா போன் பண்ணேன். மத்த எல்லா விஷயத்தையும் நான் அப்புறமா நேர்ல வந்து சொல்றேன்."

ராஜேந்திரன் போனை வைத்துவிட மஞ்சுளா திரும் பினாள். எதிரில் அவளையே வெறித்தபடி பாண்டியன், மஞ்சுளாவை அவன் வெறிப்பு என்னவோ செய்தது.

"என்னங்க. என்ன ஆச்சுங்க உங்களுக்கு?"

"போச்சு.. நீயும் இதே கேள்வியை கேட்க ஆரம்பிச் சிட்டியா? பெருமாளே...!"

"பெருமாளேவா...இப்படியெல்லாம் பேசறவர் இல்லையே நீங்க."

"வாஸ்தவம்தான் மஞ்சு... நான் கடவுள் நம்பிக்கை இல்லாம, மனித சக்திதான் பெரிசுன்னு பேசினவன்தான். ஆனா இப்ப சொல்றேன். மனித சக்திங்கறது ரொம்ப அல்பம்

மஞ்சு. அது ஒரு எல்.கே.ஜி. லெவல்தான். ஆனா இந்த உலகத்துல பல அதிசய சக்திகள் நம்ம கண்ணுக்கே தெரியாம இறைஞ்சு கிடக்கு. அதை எல்லாம் புரிஞ்சுக் கணும். அந்த சக்திகளை அடையணும்னா அதுக்கு தெய்வ நம்பிக்கை அவசியம் மஞ்சு."

"என்னங்க... பெரிய தத்துவ ஞானி மாதிரியெல்லாம் பேசறீங்க. திருப்பதி சாமியை நேர்லையே பார்த்தீங்களாமே. உண்மையாவா?"

"ஏன் மஞ்சு... நான் பார்க்கக் கூடாதா. அது தப்பா."

"இல்லீங்க... நான் தப்புன்னு சொல்லலை. ஆனா எப்படி அது சாத்யம்னுதான் கேக்கறேன்."

"எல்லாத்துக்கும் அந்த திருமலை சாமிச் சித்தர்தான் காரணம்."

"அது யாருங்க திருமலைச்சாமி சித்தர்?"

"அவர் ஒரு மகான் மஞ்சு. திருப்பதில இருக்கார். அவர்தான் எனக்கு பெருமாள் தரிசனம் கிடைக்க வழி செய்தார்."

"தப்பா எடுத்துக்காதீங்க. நீங்க பேசறது உங்களுக்கே ஒரு மாதிரி இல்லையா? குடிப்பழக்கம், சிகரெட் பழக்கம் எல்லாம் உண்டு உங்களுக்கு, கடவுள் நம்பிக்கையும் கிடை யாது. எப்பவும் கேலி கிண்டல்னு அடுத்தவங்க மனசு புண்படறத

பத்தியும் கவலைப்படாதவர் நீங்க. எப்படிப் பார்த்தாலும் உங்கள ஒரு பக்தனாவோ, இல்ல நல்ல மனுஷனாவோ கூட நினைக்க முடியாது. இப்படிப்பட்ட உங்களுக்கு ஒரு சித்தர் சாமியை பார்க்க உதவி செய் தார்னா எப்படிங்க நம்பறது?''

"அங்கதான் எனக்கே ஆச்சரியம் மஞ்சு. பூர்வ ஜென்ம புண்ணியம். பூர்வஜென்ம புண்ணியம்னு நீ அடிக்கடி கண்ட விஷயத்துக்கெல்லாம் சொல்வியே. அதுதான் காரணமோ என்னவோ?''

பாண்டியன் அவள் வரையில் தெளிவாகத்தான் பதில் சொன்னான். சொல்லிவிட்டு வாங்கி வந்திருந்த திரு மண்ணை குழைத்து நெற்றிக்கும் இட்டுக் கொண்டான். நேராகப் போய் தான் வாங்கி வந்திருந்த படத்தின் முன்போய் நின்று கைகளைக் கூப்பி வணங்கத் தொடங் கினான்.

மஞ்சுளாவால் அந்தக் காட்சியை நம்பவே முடியவில்லை. மெல்ல அவனை நெருங்கி தலைப்பகுதியை பார்த்தாள்.எங்காவது அடிபட்டிருக்குமோ என்கிற சந்தேகம், அவன் கண்களை மூடியபடி தியானிப்பவன் போல் நின்றிருந்தான்.

அவளுக்குள் இதயம் தாறுமாறாக துடித்துக் கொண் டிருந்தது.

"இந்தக் காட்சி... இவன் பக்தி... இதெல்லாம்

நல்லதற்கா... இல்ல கெட்டதற்கா?''

நல்ல விஷயமாகவே இருந்தாலும் அதை நம்புவதும் ஏற்பதும் சிரமமாக இருக்கும் அந்த நொடியில், கட்டிலில் படுத்திருந்த குழந்தை கண்விழித்து எழுந்திருந்தது. நிமிர்ந்து பார்த்து அப்பா வந்து விட்டதை உணர்ந்து கட்டிலைவிட்டு இறங்கத் தொடங்கியது.

குழந்தை பானு இரண்டு வயசிலேயே நன்றாக பேசத் தொடங்கிவிட்டது. பாண்டியனை ''பாண்டிப்பா'' என்றுதான் கூப்பிடும்.

இப்பொழுதும் அப்படியே கூப்பிட்டபடி அவனை நெருங்கி காலைக்கட்டிக் கொண்டது. ஆனால் அவனோ மூடிய கண்களை திறக்கவேயில்லை. கூப்பிய கைகளையும் விலக்கவேயில்லை.

மஞ்சுளாவும் அதைப் பார்த்து மேலும் அதிர்ந்தாள். "என்னங்க. பானு கூப்புடுது பாருங்க'' என்று அவன் கவனத்தைக் கலைக்கப் பார்த்தாள்.

அவன் அப்போதும் கண்களைத் திறக்கவில்லை. ஒரு மரம் போல் நின்று கொண்டு தியானத்திலேயே இருந் தான். இப்படியெல்லாம் காடுகளில் கடும்தவம் செய்யும் முனிவர்கள்தான் இருப்பார்கள் என்று மஞ்சுளா கேள்விப் பட்டிருக்கிறாள்.

இப்போது நேரில் பார்க்கிறாள்.

குழந்தையோ அழ ஆரம்பித்தது.

அப்பா அடியோடு மாறிவிட்டது அதற்கு எப்படித் தெரியும்? மஞ்சு குழந்தையை தூக்கினாள். அழும் அதை சமாதானப்படுத்தியபடி தள்ளி வந்தாள். அவன் வாங்கி வந்திருந்த பொம்மையை எடுத்துத் தந்தாள். அது அதை வாங்கி ரசித்து அதோடு விளையாட விரும்பாதபடி அவனையே பார்த்துக் கத்தியது.

அவளுக்குள் ராஜேந்திரன் போனில் சொன்னதெல்லாம் ஓடத் தொடங்கியது.

''இது நிச்சயமாக விபரீதமான ஏதோ ஒரு விஷயம் தான். குழந்தை என்றால் மார்பைவிட்டே இறக்காதவன் இப்போது அது அழுதும் கவனம் கலையாமல் இருக் கிறான், மனதை ஒருமுகப்படுத்துவது என்பதெல்லாம் மனிதனால் முடியவே முடியாத செயல் என்கிற கொள்கையை வைத்திருந்தவன். இப்போது கூப்பிய கரமும் உயிரில்லாத சிலையைப் போலவும் நிற்கிறான்.

நிச்சயம் இது ஏதோ புத்திப் பிசகுதான்!

மஞ்சுளாவின் தீர்மானம் அவள் கண்களில் கண்ணீரை வரவழைத்தது.

அழும் குழந்தையோடு சேர்ந்து அழுதாள்.

குழந்தை அழும் சப்தம் வாசலில் விளையாடிக் கொண் டிருந்த பக்கத்து வீட்டுப் பிள்ளைகளின் காதிலும் விழுந்து அவர்களில் ஒருவன் வீட்டுக்குள் நுழைந்தான்.

"ஆன்ட்டி, ஏன் பானுப் பாப்பா அழுவுது. உடுங்க. எங்ககூட விளையாடட்டும்'' என்றான். அவளும் கண்ணீ ரைத் துடைத்தபடி இறக்கிவிட்டாள். அவன் கைப்பிடித்து அழைத்துக் கொண்டு வெளியில் சென்றான்.

மஞ்சுளா போய் நாற்காலியில் அமர்ந்தாள்.

சாமி கும்பிட்டபடி தியானத்தில் நின்றுவிட்ட அவ னையே வெறித்துப் பார்க்க ஆரம்பித்தாள்!

ஒரு நிமிடம்...

இருநிமிடம்...

மூன்று நிமிடம்...

பாண்டியனின் தியானம் கலையவில்லை. ஆனால் மஞ்சுவால் தொடர்ந்து அவனையே வெறித்தபடி அமர முடியவில்லை.

ஆவேசமாக எழுந்து அவனருகே சென்றவள் "என் னங்க..?" என்றாள் முதலில், அவனிடம் அசைவில்லை.

"உங்களத்தான்... என்னங்க..?" பலமாக குரல் கொடுத்

தாள். அடுத்து.

அவனிடம் சின்ன பதில் சலனம் கூட இல்லை! மஞ்சுவை அடுத்த நொடி ஆவேசம் தொற்றிக் கொண்டது. சமையல் கட்டுக்குள் ஒரு ஓரமாய் இருந்த தண்ணீர்க் குடத்தைப் போய் தூக்கினாள். அப்படியே சுமந்து வந்து சிலையாட்டம் நின்று விட்ட பாண்டியன் மேல் ஊற்றத் தொடங்கினாள்.

அவனும் பிரக்ஞை திரும்பியவனாய் உதறிக்கொண்டு கண்களைத் திறந்தான். மலங்க மலங்க மஞ்சுளாவைப் பார்த்தான். மஞ்சு பதிலுக்கு எதுவும் பேசவில்லை மூர்க்க மாய் வெறித்தாள்.

அதே சமயம் வெளியே இருந்து ஒரு குரல்,

"ஆண்ட்டி... நம்ப பானுமேல ஒரு மோட்டார் பைக் ஏறிடிச்சு!" குரலைத் தொடர்ந்து அப்படியே குடத்தை போட்டுவிட்டு வாசல் பக்கம் ஓடினாள் மஞ்சு. தெருவில் விளையாடிக் கொண்டிருந்த பானுமேல் ஒரு மோட்டார் பைக் விழுந்து கிடக்க, குழந்தை உடம்பில் இருந்து ஒரு ரத்த ஆறு உருவாகி ஓடத் தொடங்கியிருந்தது.

பின்னாலேயே ஓடிவந்த பாண்டியனும் அதைப் பார்த்து விக்கித்துப் போனான்.

# 6

*எடுக்கின்ற பிறப்புக்கேற்ப சக்திகள் மாறுபடுகின்றன. வல்லூறாகப் பிறந்தால் பறக்கலாம். புலியாகவோ, சிங்க மாகவோ பிறந்தால் ரத்த மாமிசத்தை ருசித்து உண்ணலாம். பாம்பாகப் பிறந்தால் கால்களே இல்லா விட்டாலும் ஊர்ந்து இடம்பெயரலாம். பிறப்புக்கேற்ப சக்தி அம்சங்கள் – செயல் ஆற்றல்கள் வேறுபடுகின்றன. இதை ஒரே வார்த்தையில் அதுதான் இயற்கை என்றும் கூறிவிடலாம். கூர்ந்து கவனித்தால் ஆற்றல்களின் வேறுபாடுகள் புரியும், சிருஷ்டி என்பது ஒரு திட்டமிட்ட கட்டமைப்பு என்பதும் புரியும்.*

*"கண்ணைக் காக்க இமை. கால் வீசி நடக்கத் தோதாக காலில் எலும்புகளில் அமைப்பு விரல் நுனிமேல் பாதுகாப்பாக நகங்கள்!"*

*இதெல்லாம் தற்செயலாக அமைந்ததாக ஒருவராலும் கூறமுடியாது. ஒரு விஷயம் அல்லது இரு விஷயம் தான் தற்செயலாக அமையும். ஒவ்வொரு உயிருக்கும் அதன் பிறப்பிற்கேற்ப காப்பு அம்சங்களும், உயிர் வாழத் தேவையான அம்சங்களும் எப்படி தற்செயலாக அமைய முடியும்?*

*இப்படி கேள்வி கேட்டு யோசிக்கையில் ஒவ்வொரு சிருஷ்டிக்கும் பின்னால் ஒரு மிகப்பெரிய திட்டமிட்ட*

புத்திசாலித்தனம் இருப்பது தெளிவாகின்றதல்லவா?

அப்படிப்பட்ட பிறப்பில் மனிதப் பிறப்பே அனைத்தையும் புரிந்துகொள்ளும் ஆற்றல் உடைய ஒரு உயர்ந்த பிறப்பாகும், இதனால் மற்ற பிறப்பெல்லாம் தாழ்ந்தவை என்பது பொருளல்ல.

எடுக்கின்ற ஒவ்வொரு பிறப்பும் ஒரு மனித ஆற்றலைத் தந்து இறுதியாகவே மனிதப் பிறப்பெடுக் கிறோம். இந்த மனிதப் பிறப்பிலும் கூட எல்லோரும் எல்லாவித ஆற்றல்களோடு திகழ முடிவதில்லை. ஒருவருக்கு ஓவியம் சுலபமாக வருகிறது. ஒருவருக்கு நாட்டியம் சுலபமாக வருகிறது. ஒருவருக்கு கணக்கு சுலபமாக வருகிறது. இப்படிச் சுலபமாக வருவதன் பின்னணியில்தான் சூட்சமம் உள்ளது. ஒரு மனித மனது எதை மிகுதியும் விரும்புகிறதோ அதை அது என்றாவது ஒருநாள் அடைந்தே தீரும். விருப்பம்தான் இயக்க மாகிறது. செயல்படுத்தி வழி நடத்துகிறது. அந்த வகை யில் உயிர்– உடல்– சிருஷ்டி பற்றி அறிந்து கொள்ளும் விருப்பம் எவருக்கு ஏற்படுகிறதோ அவரே மகானாக அவதரிக்கிறார். தான் எடுத்த ஒரு மனிதப் பிறப்பில் அவர் சிருஷ்டி இயக்கம் முழுவதையும் ஒரு நாள் உணருகிறார். பல உபபொருட்கள் கொண்டு ஒன்று படுத்தித்தான் ஒரு எந்திரத்தை உருவாக்குகிறோம். ஒன்று படுத்தியதை பிரித்தால் எந்திரம் நீங்கி உபபொருட்கள் கிடைக்கும். உபபொருட்களை பூட்டினால் எந்திரம் கிடைக்கும். பூட்டுவதிலும் பிரிப்பதிலும்தான் இருக்கிறது எல்லாமே!

***நமது உடலும் இப்படி பல விஷயங்களின் சேர்க்கையில் உருவான ஒன்றுதான். சேர்ப்பதும் – பின் பிரிப்பதுமான ஆற்றலுக்கு வைத்திருக்கும் பெயர்தான் அணிமா!”***

***–அஷ்டமா சித்து ரகசியத்திலிருந்து.***

இன்டென்சிவ் கேர் யூனிட்!

உள்ளே குழந்தை பானு!

வெளியே அழுதபடி அமர்ந்திருந்தாள் மஞ்சுளா. அருகி லேயே சாதாரணமாக அமர்ந்து கொண்டிருந்தான் பாண்டி யன், ஆஸ்பத்திரிக்கு குழந்தையைப் பார்க்க அக்கம் பக்கத் தில் இருந்தெல்லாம் வந்திருந்தார்கள். யாரிடமும் பாண்டி யன் பெரிதாக பேசவில்லை.. மௌனமாக வெறித்தபடி அமர்ந்திருந்தான். அவர்களுக்கெல்லாம் அதுவேகூட ஆச்ச ரியமாகி விட்டது. வந்த இடத்தில் குழந்தைக்கு எப்படி இருக்கிறது? என்று கூட கேட்காமல் பாண்டியனைப் பற்றித் தான் விசாரித்தார்கள். மஞ்சுளா அவனைப் பற்றி என்ன சொல்வது என்றே தெரியாமல் குழம்பித் தவித்தாள். நடு நடுவே டாக்டர்கள் வேகவேகமாக நடந்தும் ஓடியும் அவ ளுக்குள் கிலியை மூட்டினார்கள்.

இறுதியாக ஒரு டாக்டர் அவளை அழைத்து ''இப்ப இருக்கற நிலைல எங்கலால எந்த உறுதியும் தரமுடியா

தும்மா.. மூணு மணிநேரம் கழிச்சுதான் சொல்லமுடியும். பைக் கால்மேல் ஏறினதுல கணுக்கால் பாதம் எல்லாம் கூழாயிடுச்சி. அது திரும்ப பழைய நிலைக்கு வருவது சாத் தியமே இல்லை. ஆகையால ஒரு காலை முழங்காலுக்கு கீழ் வெட்டி எடுக்கும்படிகூட ஒரு முடிவுக்கு நாங்க வரலாம். எதுவா இருந்தாலும் மூணு மணிநேரம் கழிச்சு தான் சொல்ல முடியும்'' என்று பட்டவர்த்தனமாய் பேசி விட்டுப் போய்விட்டார்.

மஞ்சுளா அதைக் கேட்டு இடி விழுந்த மாதிரி ஆகி விட்டாள். நேராக பாண்டியனை நெருங்கி "கேட்டீங்களா.. உங்க காதுல விழுந்துச்சா." என்று அவன் சட்டையைப் பிடித்து உலுக்கத் தொடங்கினாள்.

அவனும் அவளை கவலையோடு பார்த்தான்.

"எல்லாம் உங்களாலதான்... கண்ணு முழிச்ச குழந்தை உங்ககிட்டதான் வந்துச்சு, ஆனா நீங்களோ கண்டுக்கவே இல்லை. என்னமோ பெரிய சாமியார் கணக்கா தியானத் துல ஆழ்ந்துட்டீங்க இப்ப பார்த்தீங்களா?"

அவன் முதல் தடவையாக அவள் கைகளை வருத்தத் துடன் பற்றினான்.

"சாரி மஞ்சு... நான் நிஜமாலுமே தியானத்துல என்னை மறந்துட்டேன். நீ தண்ணியை கொண்டு வந்து ஊத்

தலைன்னா நாள் கணக்குல நின்னுட்டிருந்துருப்பேன். அது தான் உண்மை."

"நிப்பீங்க.. நிப்பீங்க எனக்கு பாப்பாவுக்கு இப்படி ஆனது கூட பெரிய வருத்தம் இல்லீங்க. நீங்க இப்படி ஆனதுதான் என்னால் தாங்கமுடியலை."

-அவள் வெடித்தாள்.

"தப்பா இருந்த நாள் சரியாகியிருக்கேன். இதுக்கு போய் வருத்தப்பட்றியே மஞ்சு..."

"என்ன உளர்றீங்க... ஒரு வாரம் ஊரைச் சுத்திட்டு வந்த நீங்க எங்க போனேன் என்ன பாத்தேன்னு சொல் லாம தியானத்துல நின்னுட்டேங்கறீங்களே, வெளியே சொன்னா சிரிக்கமாட்டாங்க."

"சிரிக்கறவங்களுக்கு என்னைப் பத்தியோ, எனக்கு ஏற் பட்ட அனுபவங்களைப் பத்தியோ என்ன தெரியும் மஞ்சு. நான் அதை சொன்னா நீயே நம்ப மாட்டியே."

"அப்படி என்ன காணாததை கண்டுட்டீங்க. என் வரை யில உங்களுக்கு புத்தி பிசகிப்போச்சு. அதுதான் உண்மை."

மஞ்சு இன்டென்சிவ் கேருக்கு வெளியே நின்று பேசிய பேச்சு ஒரு நர்ஸை அவளை நோக்கி திருப்பியது. அவளும் அவளை நெருங்கி "இது ஹாஸ்பிடல். இங்க சத்தம் போடக்கூடாது. வெளியே போய் பேசுங்க" என்றாள். அதே

சமயம் குழந்தை பானுமேல் பைக்கை ஏற்றிய இளைஞன் தலையிலும் கையிலும் கட்டு போட்டுக் கொண்டிருந்த நிலையில் அவர்களை நோக்கி வந்தான்.

"சாரிம்மா... குழந்தை திடீர்னு குறுக்க வந்துட்டா. என்பேர்ல எந்த தப்பும் இல்ல'' என்று ஈன சுரத்தில் பேசினான்.

"தப்பு இப்ப யார் மேலங்கறதா கேள்வி. என் குழந் தைக்கு காலே போகப்போகுதே.'' மஞ்சு புடவை முந்தியால் வாயை மூடிக்கொண்டு சற்று அமைதியாக விசும்பி அழுதாள். பாண்டியன் அவளை அங்கிருந்து நகர்த்திக் கொண்டு ஆஸ்பத்திரி ரிசப்ஷனுக்கு வந்தான். அந்த இளைஞனும் கூடவே வந்தான். அவர்களை பேந்தப்பேந்தப் பார்த்தான். பின் "எவ்வளவு செலவானாலும் நான் ஏத்துக் கறேன் கவலைப் படாதீங்க..'' என்றான்.

மஞ்சு காதில் அது விழுந்ததா என்பதே தெரியவில்லை. குலுங்கிக் குலுங்கி அழுதாள். சட்டென்று அழுகையை நிறுத்திக் கொண்டு பாண்டியனின் கையைப் பிடித்தவள் அவனை தரதரவென்று இழுத்துக்கொண்டு டாக்டர் ஒருவர் இருக்கும் அறை நோக்கி நடந்தாள். டாக்டரும் நிமிர்ந்து பார்த்தார்.

"டாக்டர் சார். இவர் என் புருஷன். இவராலதான் என்

பொண்ணுக்கு இன்னிக்கு ஆச்சிடென்டே ஆச்சு. இவர் சரியில்லை. டூர் போய்ட்டு வந்தவர் அடியோட மாறிட்டார். தியானம் பண்றேன்னு அப்படியே சிலை மாதிரியெல்லாம் நிக்கறாரு. எனக்கு பயமா இருக்குது. இவரை கொஞ்சம் செக் பண்ணுங்க" என்றாள், டாக்டருக்கு ஒரே குழப்பம்.

மஞ்சுளாவையும், பாண்டியனையும் மாறிமாறி பார்த்தார் பாண்டியனும் பதிலுக்கு அவரை மலங்கமலங்கப் பார்த்தான்

"என்ன சார். இவங்க என்னென்னவோ சொல்றாங்க உங்களுக்கு என்ன?'' - டாக்டர் நிதானமாக விசாரித்தார்.

''எனக்கு ஒண்ணுமில்லை டாக்டர். என் மனைவிதான் உணர்ச்சிவசப்பட்டு ஏதேதோ பேசறா. நீங்க தப்பா எடுத்துக் காதீங்க'' என்றான் பாண்டியன்.

"இல்ல... இவர் இப்படி பேசறத வெச்சு இவர் நார்மலா இருக்கறதா நினைச்சுடாதீங்க. போன வாரம் ஊருக்கு போறவரை இவர் ஒரு நாத்திகர். ஆனா ஒரு நாள். ஒரே ஒரு நாள் திருப்பதி போய்ட்டு வந்ததுல இருந்து அடியோட மாறி பிரமை பிடிச்சமாதிரி பேசறாரு நடந்துக்கறாரு,எனக்கு என் குழந்தை மட்டுமில்ல- இருவரும் ரொம்ப முக்கியம்" - மீண்டும் கதறினாள் மஞ்சுளா.

"அமைதியா இருங்கம்மா. நான்தான் விசாரிச்சுக்கிட்டு இருக்கேன்ல. என்ன சார். நீங்க சொல்லுங்க, ஏன் இவங்க

இப்படி எல்லாம் பேசறாங்க?"

"திரும்பவும் சொல்றேன் டாக்டர். எனக்கு எதுவும் இல்லை. என் மனைவி புரியாம பேசறா..."

"அப்ப அவங்களை சமாதானப்படுத்துங்க, இது ஹாஸ்பிடல், இங்க நீங்க மாறிமாறி அடிச்சுகிட்டா என்ன அர்த்தம்?"

"சரி டாக்டர்... ஐ வில் டேக் கேர், என் குழந்தைக்கு இப்ப எப்படி இருக்கு டாக்டர்?"

"ஐ ஆம் சாரி மிஸ்டர். உங்க பேர்"

"பாண்டியன்."

"ஐ ஆம் சாரி மிஸ்டர் பாண்டியன். உங்க குழந்தை கால் சிதைஞ்சு போச்சு, உயிர் பிழைக்க வைக்கலாம். ஆனா கால் திரும்ப வராது. அந்த அளவு அது சிதைஞ்சு எலும்புகளெல்லாமும் நொறுங்கிப் போச்சு, காலை வெட்டி எடுக்கலேன்னா உயிருக்கே ஆபத்து" - டாக்டர் சொல்லி முடிக்கும் முன் மஞ்சுளாவிற்கு மயக்கமே வந்துவிட்டது.

அவளை அருகில் உள்ள பரிசோதனைப் படுக்கையில் படுக்கவைத்து டாக்டர் மயக்கம் தெளியவைக்க முயல பாண்டியன் வெளியே வந்தான். நேராக ஐசி நோக்கி நடந்தான். உள்ளே சென்று வாயிலும் மூக்கிலும் ஆக்சிஜன்

குழாயுடனும், ட்ரிப்ஸ் ஏறிய நிலையிலும் இருக்கும் குழந்தை பானுவைப் பார்த்தான். வலது கால் இருந்த இடத்தில் ஒரு பெரியகட்டு. அதுவும் ரத்தத்தில் புரட்டி எடுத்ததுபோல சிவந்திருந்தது.

அவனுக்கு நெஞ்சைப் பிசைந்தது.

திரும்ப வெளியில் வந்தான். ஐசியு வார்டுக்கு வெளியில் கிடந்த நாற்காலி ஒன்றில் போய் அமர்ந்தான்.

''பெருமாளே. உன் நினைப்பில் என்னை மறந்து நின்று விட்ட எனக்கு நீ தரும் பரிசு இதுதானா?''

-அவனுக்குள் வேதனைக்குரல். சட்டென்று திருமலைச் சாமி சித்தர் ஞாபகமும் வந்தது. எல்லாம் அவரால் வந்த மாற்றம். அவரோடு தும்புரு தீர்த்தத்தில் இருந்து பயணம் செய்தபோது அவன் கையைப் பற்றிக் கொண்டுதான் அவர் நடந்தார். அந்த நொடி உடம்பிலும் ஒரு புதிய மின்சாரம் பாய்ந்தது போல் இருந்தது. வழக்கமாய் மனதை ஆக்ர மித்து நிற்கும் ஏன்? எதற்கு? எப்படி என்ற கேள்விகள் எல்லாம் கரையான் புற்றுக்கணக்காய் உதிர்ந்துவிழ மனதில் ஒரு புதிய ஒளி உண்டாயிற்று. காரணமில்லாமல் ஒரு விஷயமும் இந்த உலகத்தில் நடப்பதில்லை என்கிற மிகத் தெளிவான ஞானம் தோன்றியது. ஏதோ நூறு நூறு வருடம் தவம் செய்தவன் போல மனநிலையில் ஒருவித அதிர்வற்ற தன்மை,

உடம்பிலும் களைப்போ, வலியோ தெரியாதபடி ஒரு புது உற்சாகம் பிறந்தது.

யார் என்ன நினைக்கிறார்கள், நினைப்பார்கள் என்பதைப் பற்றி கவலைப்படாதே என்ற ஒரு அசாத்ய மன மாற்றம். அதுதான் இந்த நொடி நீடிக்கிறது. நடுவில் குழந்தைக்கு இப்படி ஆகக் காரணம்? நிச்சயம் இதற்கொரு விடை இருக்கிறது. அதை தன்னில் உணர முடியவில்லையே தவிர, திருமலைச் சாமி சித்திரைச் சந்தித்தால் சொல்லிவிடுவார் என்றுதான் தோன்றியது.

என்னை நினைத்தாலே போதும். நான் உன் எதிரில் நிற்பேன் என்று அவர் சொன்னதும் ஞாபகத்தில் பரவ. கைகளைக் கூப்பி அவரை நினைத்து தொழத் தொடங்கினான். "சாமி... எங்க இருக்கீங்க? வாங்க! என் மனைவி என்னை தப்பா நினைக்கறா. என் ஒரே பெண், குழந்தை உயிருக்கே போராடிகிட்டு இருக்கு. தயவு செய்து வாங்க. வந்து நல்ல வழிகாட்டுங்க."

மனதில் அவரை உச்சிமலைமீது நின்று ஓங்கின குரலில் கத்திக் கூப்பிடுவது போல கூப்பிட்டான்.

அவர் இருநூறு மைலுக்கு அப்பால் ஒரு மலையில் இருக்கிறார். இப்படி நினைப்பது அவருக்கு எப்படித் தெரிய முடியும். அவராலும் அங்கிருந்து எப்படி உடனே வரமுடி

யும்? என்கிற லாஜிக்கலான ஒரு கேள்விகூட அவனுக்குள் இல்லை. ஏதோ சில அடிதள்ளி இருக்கிற ஒருவரை அழைக்கிற மாதிரி ஒரு மைக்ரோன் அளவு கூட அவ நம்பிக்கையே இன்றி "வாங்க சாமி வாங்க.." என்று அவருக்கு அழைப்பு விடுத்தபடி அமர்ந்து விட்டான்.

முகத்தில் அதற்கான உணர்ச்சிச் சுருக்கங்கள். அதைப் பார்த்த நர்ஸ் ஒருத்தி கூட ஆச்சரியப்பட்டாள். அவனை ஒரு பித்துபிடித்தவனாகத்தான் பார்த்தாள்.

அதே சமயம் அவனருகில் அமர்ந்த நிலையில் அவன் தோள் மேல் ஒரு கரம் விழ கண்திறந்தான் பாண்டியன்.

அருகில் திருமலைச்சாமி சித்தர். சத்தியமாக அவரே தான்!

"சாமி வந்துட்டீங்களா..?" என்று அவர் கையைப் பற்றிக் கொண்டு பதிலுக்கு பரவசப்பட்டான். அவர் முகத் தில் மிக மிகச் சன்னமாய் ஒரு முறுவல். பின் கேள்வி.

"என்ன ஆச்சு?"

"என் பெண் குழந்தைக்கு ஆக்சிடென்ட் ஆயிடிச்சு சாமி... காலே போயிடிச்சு... வெட்டி எடுக்கணும்கறார் டாக்டர்."

-அவன் அழுதான். அப்போது மஞ்சுவும் மயக்கம் தெளிந்தவளாக அவனை நோக்கி வர சற்றுத்தள்ளி நின்ற

நிலையில் அவ்வளவையும் பார்த்தபடி அந்த மோட்டார் பைக் இளைஞன்!

பாண்டியனை நெருங்கிய மஞ்சு திருமலைச்சாமி சித்தரைப் பார்த்து இமைகளை படபடக்கவிட்டாள். அவளாக விசாரிக்கும் முன் பாண்டியன் முந்திக் கொண்டு "சாமி இவதான் என் மனைவி மஞ்சுளா. மஞ்சு... சாமியை கும்புட்டுக்க. இவர்தான் மலைல நான் சந்திச்ச மகான்."

அவன் சொல்ல அவள் கண்களில் அடுத்த நொடியே காந்தல்.

"இங்கேயும் வந்துட்டாரா. இந்த ஆள்தான் உங்களை மாத்தின மஹானுபாவனா?" கேள்வியோடு அவள் பார்வை அவரை ஊசிபோல் துளையிட்டது. அவரும் தொடர்ந்து சிரித்தார்.

"சிரிக்கிறீங்களா... ஒரு இளிச்சவாயன் உங்களை ஒரு மகான்னு சொல்லிட்ட மப்புல சிரிக்கிறீங்களாக்கும். ஆனா நான் சொல்லமாட்டேன். என்கிட்ட உங்கள் பாச்சால்லாம் பலிக்காது. ஆளைப்பாரு.. ஆமா குளிச்சு எத்தனை மாசம் ஆகுது?"

"ஏம்மா என்னைப் பார்த்தா அவ்வளவு அழுக்காவா தெரியுது..?''

அவர் துளிகூட பதிலுக்கு கோபப்படாமல் திருப்பிச்

கேட்டார்.

"போதும்... வெளிய போங்க. என் புருஷனை விட்டு டுங்க" மஞ்சுவிடம் வார்த்தைகள் சீறி விழுந்தன.

"பதட்டப்படாதே குழந்தை, இப்ப என்ன ஆயிடிச்சின்னு இப்படியெல்லாம் பேசறே?"

"என்ன ஆகணும்... ஒருநாள்.. ஒரே நாள்ள என் புருஷனை எப்படியெப்படியோ மாத்திட்டீங்களே, காலைக் கட்டிக்கிட்டு அழுத குழந்தையை எடுத்துக்கக்கூடதோணாம சிலைமாதிரி நின்னு தியானம் பண்ணா என்ன அர்த்தம்?"

"ஒரு கஷ்டமான விஷயம் ரொம்ப சுலபமா வசப்பட் டிருக்குன்னு அர்த்தம்."

அவர் அழகாய் பதில் சொல்ல, அந்த பதிலுக்கு ஒரு பதிலளிக்க மஞ்சு வாயைத் திறக்கும் போது குறுக்கிட்டது நர்ஸ் ஒருத்தியின் குரல்.

"சைலன்ஸ்.. இங்க பேசக்கூடாதுன்னு சொன்னேன்ல."

அவ்வளவுதான் மஞ்சுவும் திருமலைச்சாமி சித்தரை ஒரு வெறி வெறித்துவிட்டு நர்ஸிடம் சென்று "இப்ப என் பாப்பா வுக்கு எப்படி இருக்கு?" என்று கேட்டாள்.

"இப்படியா பொறுப்பில்லாம தெருவுல விளையாட விடு விங்க. போய்ப் பாருங்க.." நர்ஸ் அலட்சியமாக குத்தலுடன்

சொல்ல, வார்டுக்குள் ஓடினாள்.

குழந்தை வாட்டிய வாழை இலையாய் கிடந்தது. வாயிலும் மூக்கிலும் குழாய்களின் கோர்ப்பு. தலையில் கூட கட்டு. காலோ ரத்தப் பொட்டலம்.

"ஐய்யோ பானு..." நெஞ்சையடைக்க விசும்பியழுதவள் மீண்டும் மயங்கி விழுந்தாள். பின்னாலேயே வந்து நின்றார் திருமலைச்சாமி, குழந்தையைப் பார்த்தார். பாண்டியன் கீழே விழுந்துவிட்ட மஞ்சுவை தாங்கி நிறுத்தப் பார்த்தான். முடியாமல் தோளில் சுமந்தபடி வெளியில் வந்து அங்கே கிடந்த பெஞ்சில் கிடத்தினான்.

பார்த்துக் கொண்டே இருந்த அந்த மோட்டார் பைக் இளைஞனும் பொறுக்கமுடியாமல் நெருங்கி வந்தான்.

"என்ன சார்... பாப்பாவோட நிலையைப் பார்த்து மயங்கிட்டாங்களா?"

பாண்டியன் ஆமோதிப்பாய் தலையசைத்தான். அதே சமயம் ஒரு வார்டு பாய் திருமலைச்சாமியை பிடித்து வெளியே தள்ளிக் கொண்டிருந்தான்.

"போய்யா வெளியே.. ஐ சி க்குள்ள யார்தான் வரதுன்னு ஒரு விவஸ்தையே கிடையாதா. யாரங்கே... பிச்சைக்காரங்களை எல்லாம் யாருய்யா உள்ள விட்றது. கவனிக்கறதில்லையா?"

அவனது அலறலும், திருமலைச்சாமி சமாளித்து எழுந்து நிற்பதும் ஒரு சேரநடந்து முடிந்தது. ஆனால் பாண்டியன் பதறிப்போய் விட்டான்.

"ஏய்.. அவர் என் கெஸ்ட். பிச்சைக்காரர் இல்லை. இடியட்'' சத்தமாய் இறைந்து கத்தினான்.

"உஸ்ஸ்..." திருமலைச்சாமி உதட்டில் கையை வைத்து அவனை அமைதிப்படுத்தினார். அப்படியே மோட்டார்பைக் இளைஞனைப் பார்த்தார்.

"உன்பேர் என்ன தம்பி..."

''சிதம்பரம்!''

"உனக்கு நல்ல அடிபோல இருக்குதே..."

"ஆமாங்க... கை எலும்பு முறிஞ்சு போச்சு. தலைலயும் சுத்தியால யாரோ அடிக்கற மாதிரி ஒரு வலி."

''கிட்டவா...''

அவன் நெருங்கினான். அவர் அவன் தலையை வருடி விட்டார். அப்படியே தடவலாய் கை உடைந்த கட்டுப் பகுதியையும் வருடியவர் "நீ ரொம்ப நல்லபையன். அதான் ஆக்சிடென்ட் ஆன உடனே ஓடாம ஆஸ்பத்திரிக்கு வந்து உதவி செய்யறேன்னெல்லாம் சொல்றே." அவன் அவர் சொல்வதையே கேட்டபடி அவரைப் பார்த்தான்.

"ஆமா இது சரியாக எவ்வளவு நாளாகும்னு சொன் னாரு டாக்டர்..."

"கிட்டதட்ட மூணு மாசம் ஆகும்னார்."

"மூணு மாசமா... மூணு மணி நேரம் போதுமே?" அவர் கேள்வியும் பதிலும் அவனை திடுக்கிட வைத்தது.

"மாத்திரை வயித்துல கரைஞ்சு ரத்தத்துல கலந்து ஓடி வலி குறையவே மூணு மணிநேரம் ஆகும்னாரே..."

"அப்படியா... நான் உன்கிட்ட ஒரு கேள்வி கேட்கட் டுமா?"

"என்ன கேள்வி?"

"உன் வீட்டுக்கு நீ இங்க இருந்து போக எவ்வளவு நேரம் ஆகும்?"

"எதுக்கு கேக்கறீங்க?"

"சும்மா சொல்லு... அப்புறமா சொல்றேன்."

"என் வீட்டுக்கு நான் இங்கே இருந்து போக அதிக பட்சம் அரைமணி நேரம் ஆகும்."

"சரி... அட்ரஸ் தெரியாத ஒருத்தரை கண்டுபிடிக்கணும். அவரும் இந்த ஊர்லதான் இருக்கார்னுவை அதுக்கு எவ்வளவு நேரம் ஆகும்?"

"அத எப்படி சொல்லமுடியும், கண்டுபிடிக்கறதே கூட கஷ்டம்னு சொல்லலாம்.''

"அப்ப அட்ரஸ் தெரிஞ்சா நேரத்த சொல்லிடுவியா?"

"நிச்சயமா."

"அப்படித்தான் குணமடையற விஷயமும். வழி தெரிஞ்சா மூணுமாசம் மூணு மணிநேரமாயிடும் சிதம்பரம்."

திருமலைச்சாமி பதிலில் ஏதோ பொருள் இருக்கிற மாதிரியும் இருந்தது. இல்லாத மாதிரியும் இருந்தது. "அப் படின்னா... என்னோட இந்த வேதனையை மூணு மாசத் துக்குள்றன்னு இல்லாம மூணு மணி நேரத்துல போக்கி குணப்படுத்த முடியும்னு சொல்றீங்களா?"

"புரிஞ்சுகிட்டியே... கிட்டவா! கைகொடு...." அவர் அவனை அழைத்து கையை நீட்டினார். அவனும் தயக்கத் தோடு பதிலுக்கு கையை நீட்டினான். அவர் அவன் கையைப் பற்றிய நொடி தும்புரு தீர்த்தத்தில் பாண்டியனுக்கு ஏற்பட்ட அதே பரவச உணர்வும். லேசான தன்மையும் அவனுக்கும் ஏற்பட்டது.

"வா... ஒரு மூணு மணிநேரம் நாம அப்படியே வெளிய சுத்திட்டு வருவோம்."

அவர் அவனை அழைத்துக்கொண்டு நடக்க பாண்டி யன் "சாமி....'" என்று கத்தினான்.

"வந்துருவேன் கவலைப்படாதே... உன் பொண்ணுக்கு ஒண்ணும் ஆகாது. அவ நடப்பா, அதுக்கு நான் பொறுப்பு வரட்டுமா?"

-சொல்லிக்கொண்டே காரிடாரில் நடந்து அவர் கண் களை விட்டு மறைந்தும் போனார்!

பாண்டியன் நம்பிக்கையோடு போய் அருகில் மயங்கிய நிலையில் இருக்கும் மஞ்சு அருகில் அமர்ந்தான். அவள் தலையையும் மெல்ல வருடிக் கொடுத்தான்.

நேரமும் உருளத் தொடங்கியது!

# 7

***சித்திகளில் ஔஷத சித்தி என்றும் ஒன்று உண்டு. ஔஷதம் என்றால் மருந்து. அதை இந்த உலகத்திற்கு தருவதும் பஞ்ச பூதங்களே. ஒரு மூலிகைச் செடியின் விதை மண்ணுக்குள் புதைக்கப் பட்டு மூடப்பட்ட நொடி பஞ்சபூத வினைகள் ஆரம்பமாகிவிடுகின்றன!***

***அந்த விதை நீரை உண்டு மண்ணின் இதர சக்தி களையும் உண்டு தன்னுள் அடங்கியிருக்கும் அணுக்களில் பெருக்கம் கொள்கிறது. இந்த பெருக்கத்தால் தான் அது மூடிய மண்ணை மீறிக்கொண்டு வெளியே வருகிறது. ஆகாயத்தில் காற்றும் சூரியக்கதிர்களும் இருந்து அந்த***

*மூலிகைச் செடியின் தண்டுகளை மேலும் பருமனாக்கு கின்றன. இப்படிச் சொல்வது மனித மனங்களுக்கு எளிதாக புரிவதற்காகவே. உண்மையில் விதையின் அணுப்பெருக்கம் என்பது பஞ்ச பூதங்களில் இறைந்து கிடக்கும் சக்திகள் ஒன்று படுவதைத்தான் குறிக்கிறது. இவ்வாறு ஒன்றுபட குறிப்பிட்ட காலம் தேவைப் படுகிறது. மூலிகைச் செடியும் தன் அணுத்திரளுக்கு ஏற்ற மற்ற அணுக்களை உட்கொண்டு வளர்ந்து பெருகி காய்கனி என்று உலகிற்கு வழங்குகிறது. இவைகளில் சிலவற்றை உட் கொண்டு நாம் கண்ணாடியைக் கூட கடித்து விழுங்கலாம், நாவிற்கோ வாயின் உள்பாகங்களே நசியவே நசியாது. இன்னும் சில மூலிகைகள் உடம்பின் பஞ்ச பூத சேர்க்கையால் ஒவ்வொரு நொடியும் நிகழும் உடம்பின் பெருக்கத்தை அல்லது மாற்றத்தை அப்படியே தடுத்து நிறுத்திவிடும். இதனால் உட்கொள்ளும் போது உடலானது எந்த வயதில் எந்த நிலையில் இருந்ததோ அந்த வயதே அந்த நிலை அப்படியே நீடிக்கும். இதனால் முதுமை என்னும் மாற்றத்தை தவிர்க்கலாம்.*

*இதை இப்படியும் சொல்லலாம். அந்த உடம்பைப் பொறுத்து காலம் நின்றுவிடும். செயல்படாது.*

*பிரபஞ்ச வெளியில் காலம் நின்றுவிட்ட இருண்ட பாகங்கள் (பிளாக்ஹோல்ஸ்) இருக்கின்றன. உண்மையில் காலம் என்பது என்ன? பூமி தன்னைத் தானே சுற்றிக் கொள்ள அன்றாடம் எடுத்துக் கொள்ளும் 24 மணி நேரம் என்கிற அளவுதானே காலம்.*

*பூமிக்கு வெளியே ஆகாயத்தில் சூரிய சந்திரர்களின் ஒளிபடாத ஒரு இடத்தில் உண்மையில் என்ன இருக் கிறது. அங்கே எதை வைத்து காலம் என்று ஒன்று இருப்பதை உணர முடியும்?*

*சிந்தித்துப் பாருங்கள்.*

*நமது உடலிலும் பஞ்ச பூத வினைகள் நிகழாமல் நாமும் எந்த மாற்றங்களுக்கும் ஆளாகாமல் அப்படியே நின்றுவிட எந்த இயக்கமும் இல்லாத ஒரு இடத்தில் காலம் என்ற ஒன்றே இல்லாமல் போகிறதல்லவா? என்றால் அனைத்தையும் உணர்வது என்பது எது? மனதுதானே? இந்த மனம்தானே காலதேசவர்த்த மானங்களை கணிக்கிறது. அதைக் கூட்டுவதும் கழிப்பதும் மனதுதானே?*

*காலத்தோடு சேர்ந்து பயணிக்கும் நாம் அதன் வேகத்தை கண்டறிந்து அதை விட பல மடங்கு பின்னோக்கிப் பயணித்தால் நாம் இழந்த நாட்களுக்குள் நுழைந்து விட முடியுமல்லவா?"*

*-அஷ்டமா சித்து ரகசியத்திலிருந்து.*

**ஆ**ஸ்பத்திரிக்குள் மஞ்சுவின் அப்பா சபேசனும் அம்மா பூரணியும் நுழைந்து கொண்டிருந்தனர்.

அவர்களைப் பார்த்த அவளும் கட்டிக்கொண்டு அழு தாள், ஆக்சிடெண்ட் நடந்த விதத்தையும், பாண்டியன் மாறி விட்டதையும் திரும்ப ஒருமுறை அவன் காதுபட அவர்கள்

எதிரில் சொல்லி அழுதாள்.

அப்பா சபேசன் பாண்டியனைப் பார்த்து "என்ன மாப்ளை இதெல்லாம்.?" என்று மென்று விழுங்கினார். அவனும் சளைக்கவில்லை. அவனுக்குள் திருமலைசாமி சொல்லி விட்டுப்போனது காதில் எதிரொலித்துக்கொண்டே இருந்தது. "ஒண்ணும் ஆகல மாமா... பானுவுக்கு நல்லாயிடும். நீங்க நாளைக்கே பாருங்க அவ எழுந்து ஓடுவா..." என்றான்.

"பாத்தீங்களா.. இவர் பேசறத கேட்டீங்களா, நாளைக்கே எழுந்து ஓடுவாளாம், கொஞ்சமாவது இவருக்கு கவலை இருக்குதா.எவ்வளவு தூரத்துக்கு இவர் புத்தி பிசகியிருந்தா இப்படி துளி கூட பதட்டப்படாம பேசுவாரு?

மஞ்சு கேட்க சபேசனும் அதிர்ச்சியோடு பாண்டியனைப் பார்த்தார்.

"மாமா... இப்பா நான் சொல்லும் போது உங்களுக்கு பைத்தியக்காரத்தனமாதான் இருக்கும்.ஆனா நீங்க வேணா பாருங்க. திருமலைச்சாமியே சொல்லிட்டார் அப்புறம் என்ன மாமா?"

"அது யார் மாப்ளை திருமலைச்சாமி?"

"ஒரு கிறுக்குப் பிச்சைக்காரன். அவன்கிட்ட என்ன இருக்குன்னு இவர் அவனை மதிக்கறாருன்னு தெரியல. இல்ல அவன்தான் இவருக்கு ஏதாவது செய்வினைபண்ணி

இப்படி உளற வைக்கறானான்னும் தெரியல."

தொடர்ந்து கண்ணைக் கசக்கினாள் மஞ்சுளா.

"சரிம்மா இப்ப எங்க அந்த ஆள்?"

"இன்னும் சரியா இரண்டு மணி நேரத்துல வந்துடு வாரு'' பாண்டியன் தன் கடிகாரத்தை பார்த்தபடி சொன் னான்.

"அவர் யார் மாப்ள...?''

"காலத்தையே ஜெயிச்ச மகான் மாமா."

"சரி மாப்ளை... நீங்க சொல்றதுதான் சரி."

சபேசன் திடீரென்று கட்சி மாறினார்.

"அப்பா... மஞ்சுளா வீறிட்டாள். பதிலுக்கு கண் சிமிட்டி யவர் அவள் காதருகில் சென்று "சும்மா இரும்மா. நான் அவர் போற போக்குல போற மாதிரி நடிக்கப்போறேன். நீ சொல்றதுதான் சரி.. மாப்ளைக்கு ஏதோ சிந்த பிரமை" என்று கிசுகிசுத்தவர் திரும்பவும் பாண்டியனிடம் வந்தார்.

"அடியோட மாறிட்டீங்களே..." என்றார் சீரியஸாக.

"ஆமாம் மாமா... நான் சில புத்தகங்கள்ள படிச்சிருக் கேன். வாழ்க்கை என்பது ஒரு விசித்திரமான விளையாட்டு மைதானம். அதில் ஒரு நொடி போதும் சிலர் வாழ்வு அப்படியே மாறுவதற்குன்னுல்லாம் படிச்சிருக்கேன். அப்ப எனக்கு அது புரியல. இப்ப சொல்றேன் மாமா, என்

வாழ்க்கை கூட திருப்பதியில ஒரு நொடிலதான் மாறிச்சு. அந்த ஒரு நொடியை இப்ப நினைச்சாலும் சிலிர்ப்பா இருக்கு" என்றான்.

அவன் சொல்லும்விதம் அதில் உள்ள உணர்ச்சிவசப் பாடு எல்லாமே மிகவும் அர்த்த பூர்வமாகவும் அழுத்தம் திருத்தமாகவும் இருக்கின்ற மாதிரிதான் சபேசனுக்குத் தோன்றியது.

நடுவில் மஞ்சுளா மீண்டும் அவரை தனியே அழைத் தாள். அவரும் ஒதுங்கினார்.

"என்னம்மா..?"

"அப்பா எனக்கு பயமாக இருக்கு. இவர் பேசற எதையும் நம்பாதீங்க. டாக்டரை பார்த்து காலை எடுக் காமலே சரி பண்ண முடியாதான்னு கேளுங்கப்பா."

சொல்லும்போதே அவள் கண்களில் கண்ணீர் கரகர வென்று கொட்டியது.

"அழுவாதே... அழுவாதே... நான் விசாரிக்கறேன். வேணும்னா நீயும் கூடவா" -சபேசன் உடனேயே டாக்டரை சந்திக்க கிளம்பினார்.

அழுது கொண்டே பின் தொடர்ந்தாள் மஞ்சுளா.

டாக்டர் இருவரும் வரவும் ஒரு பரிதாபப் பார்வை

பார்த்தார்.

"டாக்டர்." சபேசன் ஆரம்பிக்கும் முன்பாகவே டாக்டர் முந்திக்கொள்ள தொடங்கிவிட்டார்.

"இதோ பாருங்க சார்.. நீங்க என் சொல்லப்போறீங்க என்ன எதிர்பார்க்கறீங்க. எல்லாமே எனக்குத் தெரியும். அடிபட்டு ஐசில இருக்கறது ஒரு பிஞ்சுக் குழந்தை, அது இப்ப உயிரோடு இருக்கறதே ஒரு அதிசயம்தான். அதோட காலை எடுத்தாதான் இப்ப ஒட்டிகிட்டிருக்கற உயிர் தங்கும். ஒரு கால் போனா அது அந்த குழந்தையோட எதிர்காலத்தை எந்த அளவு பாதிக்கும்னுல்லாம் எங்க ளுக்குத் தெரியாம இல்லை. எங்களுக்கும் குழந்தைகள் இருக்கே?"

"அப்ப காலை எடுத்தே தீரணுமா?"

"நிச்சயமா... அஸ் எ டாக்டரா எனக்கு அதைத்தவிர வேறு வழி தெரியல. ஈவன் பிரார்த்தனையால கூட உயிரை வேணா காப்பாத்தலாம். காலையெல்லாம் வர வைக்க முடியாது. அந்த அளவு திசுக்கள் நசிஞ்சு நரம்பு களும் அறுந்துபோயிருக்குது. குழந்தை வலியை உணராம இருக்க இப்ப இஞ்ஜெக்ஷன் போட்டு, பல்ஸை ரெகுலேட் பண்ணிகிட்டிருக்கோம். நிறைய ரத்தம் வேற போயிருக்கு. குழந்தையோட குரூப்புக்கேற்ற ரத்தத்தை வாங்கி வர பிளட்

பேங்குக்கு எங்க ரெப்ரசென்டேடிவ்ஸ் போயிருக்காங்க. இதுதான் இப்போதைய நிலை. நீங்க மனசைத் தேத்திக் கறதைத் தவிர வேறு வழியே இல்லை."

-டாக்டர் மிக விளக்கமாக சொல்லி முடிக்க மஞ்சுளா விற்கு மீண்டும் மயக்கம் வரும்போல் இருந்தது. சபேசன் அவளை அணைத்தபடியே வெளியே அழைத்து வந்தார்.

பாண்டியன் அவளது கவலையில் பத்து சதம் கூட இல்லாதவனாக விச்ராந்தியாக இருந்தான்.

ஒரு நல்ல தகப்பனால் எப்படி இப்படி எல்லாம் இருக்க முடியும்?

சபேசனுக்குள் கோபமும் குமைச்சலும் கைகோர்த்துக் கொண்டு தட்டாமலை சுற்றிற்று. மஞ்சுளாவின் அம்மா அவளைத் தாங்கிக் கொண்டாள். சபேசன் மெல்ல மீண்டும் பாண்டியனை நெருங்கினார்.

''மாப்ள...''

''என்ன மாமா?''

"எப்படி மாப்ள உங்களால இப்ப கவலைப்படாம இருக்க முடியுது?"

"எதுக்கு மாமா கவலைப்படணும், திருமலைச்சாமி இருக்கார் மாமா..."

"எந்த சாமியாலும் பாப்பாவுக்கு காலை மட்டும் கொடுக்க முடியாதுன்னுட்டார் டாக்டர்."

"அவங்க கிடக்கறாங்க. டாக்டருக்கெல்லாம் பெரிய டாக்டர் திருப்பதிசாமி அவரோட பிரதிநிதி அந்த திரு மலைச்சாமி."

"நீங்க இப்படி பேசறது சரியில்லை. குழந்தையோட நிலையைவிட உங்க நிலைதான் எனக்கு இப்ப அதிக கவலை தருது."

"எனக்கென்ன மாமா... நான் நல்லா இருக்கேன். பழைய பாண்டியனா இருந்திருந்தா பதைச்சுப்போய் இந்த நிமிஷம் அழுது புலம்பியிருப்பேன். மோட்டார் பைக்கை ஏத்தின அந்த சிதம்பரம்கறவனையும் பிரிச்சு மேய்ஞ்சி ருப்பேன். ஆனா நான் இப்ப ஒரு தெளிவான மனுஷன். அதான் தைரியமா நம்பிக்கையோட இருக்கேன்." -அவன் வைராக்யமாய் பேசப்பேச அவருக்குள் அணு உலைக்கூடம் போல மனது கொதித்தது. இனி இவனிடம் பேசுவது பலனில்லை. இவனையும் சிகிச்சைக்கு உட்படுத்த வேண்டியதுதான். அவருக்குள் தீர்மானங்கள்.

நேரமும் டாக்டர் கெடுவிதித்த அந்த மூன்று மணிநேர முடிவை நோக்கிச் சென்று கொண்டிருந்தது.

அடுத்து இனி என்ன ஆகும்?

# 8

*இந்த உலகில் திடப்பொருள் என்று நாம் கருதும் எந்த ஒன்றின் உள்ளும் ஊடுருவும் ஆற்றல் அணிமாவிற்கு உண்டு. ஒரு திரைச்சீலை மறைத்துக் கொண்டிருக்கிறது. அதன் அருகே சென்று உற்றுப் பார்த் தால் அதன் மிகச் சிறிய துவாரங்கள் வழியாக அதன் பின்புறம் தெரியும். இதுபோன்ற துவாரங்கள் அனைத் திலும் உண்டு. அந்த துவாரங்கள் வழியே புகுந்து வெளியேறுதல்தான் அணிமா சித்தி.*

*இதனாலேயே பல சித்த புருஷர்கள் பூட்டிய அறை களைக் கடந்து வெளியே சென்று வந்தனர். இவர்கள் பஞ்சபூத அணுக்களால் ஆன தங்கள் பௌதிக உடலைக் காற்றில் மிதக்கும் தூசாக ஆக்கி துளைகளை ஊடுருவு வார்கள். ஒருவிதத்தில் இந்த உலகமே பஞ்ச கலவை யோடு இவர்கள் கலந்து விடுவர். இந்த வகையில் பார்த்தால் இந்த உலகின் ஒரு துண்டுப் பகுதிதான் நாம், நாம் வேறு. இந்த பிரபஞ்ச உலகம் வேறு இல்லை.*

*உலகம் வேறு... உடல் வேறு... மனம் வேறு... என்ப தெல்லாம் அறியாமை. அதனாலேயே நமது ஆற்றல் குறைந்து மனித சக்தி ஒரு எல்லைக்கு கட்டுப்பட்டது என்ற எண்ணமும் வலுப்பட்டுவிடுகிறது. உண்மை அதுவல்ல. எரித்து சாம்பலாக்கப்பட்ட ஒரு பிரேத சாம்ப*

***லுக்குள் மீண்டும் உடலை உருவாக்கிய மகா புருஷர்கள் இந்த உலகில் இருந்திருக்கிறார்கள். அணிமா வசப்பட்டு விட்டால் நாம் வேறு உலகம் வேறு இல்லை. நம்மை நேரம் காலம் இடம் என்கிற எதுவும் ஒன்றும் செய்யாது."***

***-அஷ்டமா சித்து ரகசியத்திலிருந்து.***

**தி**ருமலைச்சாமியும் சிதம்பரமும் அந்தக் கடலோரமாய் அமர்ந்திருந்தனர். சிதம்பரம் அவரையே பார்த்தபடி அமர்ந் திருந்தாலும் சும்மா இல்லாமல் அவள் கையைப் பற்றி விரல்களை சொடுக்கு எடுத்தபடியும், வருடிக் கொடுத்தும் ஃபிசியோதெரபி பயிற்சியாளர்களைப் போல செயல்பட்டுக் கொண்டிருந்தார்.

அவனும் மறுப்பே சொல்லாமல் அவர் செய்வதற்கெல் லாம் இசைவாக உடன்பட்டிருந்தான்.

அலை ஆர்ப்பாட்டமாய் பொங்கிச் சீறி அட்டகாசம் பண்ணிக் கொண்டிருந்தன.

கடற்கரைக் காற்றிடம் என்றைக்கு அமைதி இருந்திருக் கிறது? அது ஆவேசமாய் ஊளையிட்டபடியே திரிந்து கொண்டிருந்தது.

இதமான வெய்யில். வானத்திலும் பஞ்சு மூட்டையி லிருந்து உதிர்ந்து சிதறிய மாதிரி மேகங்கள். அந்த மேகங் களை எங்களால் மட்டுமே தீண்ட முடியும் என்கிறார் போல

வல்லூறுகளும், மற்ற பெயர் தெரியாத சில பறவை களும் பறந்தபடியே இருந்தன.

பொதுப்படையாக பார்த்தால் சென்னைக்குரிய காட்சி தான். கடல்வெளி நீர் மேலும் சில குட்டித் திமிங்கிலங்கள் அவ்வப்போது தெரிந்து சில அடி உயரத்திற்கு அந்தரத்தில் எகிறிப் பின் நீருக்குள் நுழைந்து ஏகாந்தமாய் விளையாடிக் கொண்டிருக்க, திருமலைச்சாமி அதை எல்லாம் ரசித்த படியே சிதம்பரத்தை தடவிக் கொடுத்துக் கொண்டிருந்தார்.

அவன் பதிலுக்கு எந்த எதிர்க்கூச்சங்களும் இன்றி அவர் அருகே உட்கார்ந்திருந்ததுதான் ஆச்சரியம்.

"என்னப்பா... எதுவும் பேசமாட்டியா?''

''என்ன சாமி பேச... நீங்க பக்கத்துல இருக்கற இந்த நொடிப்பொழுது ரொம்ப வித்யாசமா இருக்குதுங்க. இப்படி எல்லாம் மனசு லேசா எனக்கு எப்பவும் இருந்ததே இல்லை..."

"மனசு பாரமா இருக்குன்னா அப்ப அந்த மனசுல தப்பான ஆசைகள் நிறைய இருக்குதுன்னு அர்த்தம் தம்பி.''

''எது தப்பான ஆசை சாமி.?"

"அழியற விஷயங்கள் மேல வைக்கிற ஆசை எல் லாமே தப்புதானே?"

"எப்படி சாமி... சாப்பிட்றோம் அது ஜீரணமாகி மலமாகி வெளியே போயிடும்கறது தெரியும். அதனால எதுக்கு சாப்டுகிட்டுன்னு சாப்பிடமா இருக்க முடியுமா?"

"பரவால்லியே... எடுத்த எடுப்புல ஒரு நல்ல அழுத் தமான கேள்வியை கேட்டுட்டியே."

"என் கேள்வி நல்ல கேள்வின்னா உங்களோட நல்ல பதில் என்ன சாமி?"

"சாப்பிட்ற சாப்பாடும் அதனால கிடைக்கிற சக்தியும் ரொம்ப தற்காலிகமானதுதான். தற்காலிக சக்தியை தக்க வெச்சுக்கத்தான் தொடர்ந்து சாப்பிட்றோம். அந்த சக்தியை யும் நாம தப்புத்தப்பா செலவழிக்கறோம். இதனால களைப்பு ஆயாசம் எல்லாம் ஏற்படுது. இதைவிடகொடுமை சக்தி தேவைங்கறதுக்காக ஒரு நாள் தேவைக்கு அதிக மாகவும், ஒரு நாள் தேவைக்கு குறைவாகவும் சாப்பிட்றது. இதனால் தொந்தியும் தொப்பையும் உருவாகி கூடுதல் சதைகளை காலமெல்லாம் ஒரு மூட்டை மாதிரி சுமக்க வேண்டிய கொடுமை வேற. ஆமா உன் எடை என்ன?"

"எண்பது கிலோ..."

"முப்பது கிலோ கூட இருக்கே... கிட்டத்தட்ட அரை மூட்டை அரிசி கீழ இறக்கி வைக்காம சுமக்கறவங்களும் நீயும் ஒண்ணு, உன்னை மூட்டை தூக்கின்னு சொன்னா

தப்பில்லை."

திருமலை சாமிக்கு பரிகாசமும் செய்யத் தெரிந்திருந்தது.

"என்ன சாமி. எண்பது கிலோவுக்கே இப்படி சொல்றீங்க அம்பது கிலோ இருந்தா சொத்தையா ஈர்க்குச்சி மாதிரில்ல இருக்க முடியும், அப்படி இருந்துகிட்டு எந்த வேலையை செய்ய முடியும், பைக்கை உதைச்சு ஸ்டார்ட் பண்ணக் கூட சக்தி இருக்காதே...?"

திருமலைச்சாமி சிரித்தார்.

"என்ன சிரிக்கிறீங்க?"

"உன்னை நினைச்சு சிரிக்காம என்ன பண்றது? உடம்பு பெரிசா இருந்தா பலசாலி. ஒல்லியா இருந்தா பலவீனம்னு நினைக்கறியே."

"இல்லையா பின்னே. நல்லா சாப்ட்டு உடம்பை திட காத்திரமா வெச்சுருக்கறவங்கதானே நூறுகிலோ நூத்தம்பது கிலோன்னு வெயிட் லிஃப்டிங்ல எடையை தூக்க முடி யுது?"

"அப்ப ஒரு சின்ன மூங்கில் குச்சி அதைவிட பல மடங்கு பாரமுள்ள ஒரு பாறையை நெம்பித்தள்ளிடுதே அது எப்படி?"

"தள்றதும்... தூக்கறதும் ஒண்ணா சாமி?"

"நீ ஏன் தூக்க ஆசைப்பட்றே, மனுஷனுக்கு யோசிக்கிற

ஆறாவது அறிவுன்னு ஒண்ணை எதுக்கு கொடுத்துருக்கு இயற்கை. புத்திசாலித்தனமாக நடந்துக்கத்தானே?"

"அப்ப தூக்கற அளவு சக்தியோட இருக்கறது தப்பா?"

"எப்பவோ ஒரு தடவை நூறு நூத்தம்பது கிலோ எடையை தூக்கறதுக்காக எப்பவும் உடம்புல நூறு நூத்தம் பது கிலோ எடையை தூக்கிகிட்டு அவ்வளவு சதைக் காகவும் கஷ்டப் பட்டு மூச்சுவிட்டுகிட்டு இருக்கறது தப்பா சரியா தம்பி...?"

சிதம்பரம் திருமலைச்சாமியின் கேள்வி முன்னால் நெடுநேரம் யோசித்தான்.

மனது லேசாக இருக்கிறது என்று சொல்லப்போய் தவறான ஆசைகள் மனதை பாரமாக்கிவிடுவதாய் அவர் சொன்னது நீண்டு கொண்டே போய் இறுதியில் இப்படியா உடம்பை வளர்ப்பது தப்பு என்பதில் முடிய வேண்டும்?

"சரி சாமி நீங்க சொல்றத ஒத்துக்கறேன். தப்பான ஆசைகள் அதனால முறை தவறி உணவுப் பழக்கங்கள்னு எவ்வளவோ சொன்னீங்க, எதுசாமி சரியான ஆசை... உங்களை மாதிரி ஷேவ் பண்ணாம தாடி வளர்த்துகிட்டு பக்கிரி மாதிரி இருக்கறதா?"

சிதம்பரம் தெரிந்துகொள்ள கேட்கிறானா இல்லை இது தான் சாக்கு என்று அவரை இடிக்கிறானா என்பது தெரிய

வில்லை. திருமலைச்சாமி மீண்டும் சிரித்தார்.

"என்ன சாமி சிரிக்கிறீங்க. நான் உங்களை கேலி பண்ற துக்காக கேக்கல. எது சரியான ஆசைன்னு புரிஞ்சுக்கத் தான் கேட்டேன்."

"அழகுன்னா என்ன தம்பி...?"

"கண்ணுக்கு இதமா இருக்கறதுதான் எனக்கு தெரிஞ்சு அழகு."

"நான் இதமா இல்லையா. என்னைப் பார்த்தா முர டாவா தெரியுது?"

''முரடா இல்லை. அழுக்கானவர் மாதிரி தெரியுது''

"உண்மைல ஒரு நாளைக்கு நாலு தடவை குளிக் கறவன் நான். தாடி மீசை தலைமுடியெல்லாம் ஒரு யோகி எவ்வளவு பலமானவன்னு சொல்ற விஷயங்கள். அது காடா இருந்தா தப்பு இல்ல. அதுதான் சரி...''

"அப்ப வழுக்கைத் தலையோட ஒரு யோகி இருந்தா அவர் பலவீனமானவர்னு அர்த்தமா?"

''வழுக்கைங்கறது தப்பான உணவு முறை, உஷ்ண ஆதிக்கம், பதட்டமான மனநிலை, முறைதவறி தூக்கம் இவைகளால உருவாகக்கூடியது. ஒரு தலைமுறைல ஒரு வருக்கு இது நேரிட்டாலும் அது தொடரக்கூடியது இதனால

சித்தாகாசம் வசப்பட காலதாமதம் ஆகும்.''

"அப்படின்னா உங்களுக்கு சித்தாகாசம் வசப்பட்டு டிச்சா... சித்தாகாசம்னா என்ன?"

சிதம்பரம் அவரோடு கேள்விக்கு கேள்வி என்று ஞான வேட்கையில் தொடர்ந்து கொண்டே போனான். அவரும் சளைக்காமல் பதில் சொல்லிக்கொண்டே போனார். சாதார ணமாய் இப்படி சிந்தித்தே பழக்கமில்லாதவன் சிதம்பரம். இதெல்லாம் அவன் வரையில் போர் அடிக்கும் சமாச்சாரங் கள்.

ஆனால் எப்படி இப்படி கவனிக்க முடிகிறது. கேள்வி கரும் உள்தோன்றுகிறது. எல்லாம் அவர் அருகில் இருப் பதன் எதிரொலியா?

இருக்கலாம் என்றுதான் தோன்றியது.அவர் சித்தாகாசத் துக்கு விளக்கமளிக்கத் தொடங்கியிருந்தார். "ஒவ்வொரு மனித உடம்புக்குள்ளேயும் அபரிதமான சக்திகள் ஒளிஞ்சு கிடக்கு.அது தப்பான வாழ்க்கை முறைகளால செயலிழந்து கிடக்கு, அந்த தப்பான வாழ்க்கை முறைகள் மாறினால் அந்த அபரிதமான சக்தி செயல்படத் தொடங்கும். அதுக்கு உடம்பை திடமா நலமா வெச்சுக்கறது ரொம்ப முக்கியம். உடம்பு திடமா நலமா இருந்தா மனசும் தெளிவா மகிழ்வா மாறிடும். இந்த திடமான நலமான உடம்புக்கு யோகப் பயிற்சி

ரொம்ப முக்கியம். யோகப்பயிற்சியில குண்டலினி யோகம்னு ஒண்ணு இருக்கு. அது செய்யும்போது நாம இருந்தும் இல்லாம போய்டுவோம். அவ்வளவு லேசா இந்த உடம்பு ஆயிடும், அப்ப இந்த உடம்பை காற்றுல தக்கை போல மிதக்க வைக்கலாம். நாமளும் சிறகு உள்ள பறவை போல ஆகாசத்துல ஏறிப் பறக்கலாம்..."

அவர் அவன் பல புத்தகங்களில் படித்ததை சொல்வ தாகத்தான் தோன்றியது.

"சாமி நீங்க சொல்றத எப்படி நான் நம்பறது. பலவீன மான நிலைல இப்ப என் மனசு இருக்குன்னா அதுக்கு நம்பிக்கைங்கற பலம் முதல்ல அவசியமா இல்லையா?"

"அப்ப, இப்ப உனக்கு நான் சொல்ற விஷயங்கள்ள நம்பிக்கை ஏற்படணுமா?"

"ஆமாம். நான் நம்பற மாதிரி எனக்கு சொல்லுங்க. ஒரே தியரியா இருக்கு உங்க பேச்சு. நானும் யோகம் செய்ய முயற்சி செய்துருக்கேன். எப்ப மனசை அடக்க உட்கார்ந்தாலும் அப்பதான் மனசுல ஏகப்பட்ட எண்ணங்கள் தோணுது. அந்த மனசு அடங்கி அதனால ஒரு சுவை எனக்கு கிடைச்சாதானே நான் அதைப் பிடிச்சிப்பேன்."

அதுதான் தம்பி யோகத்தோட முதல் லட்சணம். உன் மனக்குப்பை எல்லாம் அப்ப வெளியேறுதுன்னு அர்த்தம்.

அது வெளியேறும் வரை நீ பொறுமையா முயற்சி செய்ய னும்."

"ஏன் இப்படியும் சொல்லலாமே. மனசுன்னு இருந்தா எண்ணங்களும் எப்பவும் இருக்கும். எண்ணமே இல்லாத சூன்யமா மனசு ஆகவே ஆகாது. ஆக முடியாது. ஆக முடியாத ஒண்ணை சும்மாவானும் சொல்லி நீங்க ஏமாத்த றீங்கன்னு நான் சொல்லலாமே?''

"உன்னை ஏமாத்தறதுல ஒரு யோகிக்கு என்னப்பா லாபம்?"

"முடியாததை நாங்க செய்யறவங்கன்னு நீங்க பெருமை பீத்திக்கலாம் இல்லையா?''

"அப்படியா... அப்ப உடம்போ மனசோ கட்டுப்படாத ஒரு விஷயமா...?''

"நிச்சயமா... அதன் போக்குலதான் நாம எப்பவும் போக முடியும். என் வயிறுதானேன்னு நான் சாப்பிடாம இருந்தா என் பேச்சைக் கேட்டுகிட்டு அது சும்மா இருக்கறது கிடை யாது. எனக்கு பசி மயக்கத்தை அல்லவா அது தருது, அதுக்கு பயந்துகிட்டுதானே நாம சாப்பிட்றோம்.''

"அப்ப உடம்புக்கு கட்டுப்பட்டுதான் மனிதன் இருக்க முடியும். உம்பைக் கட்டுப்படுத்தி ஒரு மனுஷன் இருக்க முடியாதுங்கறியா?''

"ஆமாம்.. வேணும்னா ஒருநாள் இரண்டு நாள் பட்டினி கிடக்கலாம். அதுக்குமேல கிடந்தா உயிர்போயிடும்.''

"அப்படியா.. அப்ப உனக்கு பட்ட காயங்கள் ஆற டாக் டர் சொன்ன மாதிரி மூணு மாசம் ஆகும்கறியா?'' திருமலை சாமி கேட்கும்போதுதான் அந்த காயங்களின் ஞாபகமே வந்தது. தன்னை மறந்து அவரிடம் பேசிக் கொண்டிருந்ததும் புரிய வந்தது. அதன் எதிரொலியாக காயங்களைப் பார்த்தான்.

பகீரென்றது...

இதயம் கூட அதனால் வேகமாய் துடித்து அவன் கண்கள் அகண்டுபோயின. அவன் காயங்கள் இப்பொழுது காயங்களாகவே இல்லை? உள் எலும்பு தெரியும்வரை பிளந்து கொண்டிருந்த சதைக் கிழிசல் ஒன்றுபட்டு பேருக்கு அங்கே ஒரு தழும்பும், ரத்தச் சுவடே இல்லாமலும் மூன்றாவது மாதத்தில் ஆறின புண்ணாக ஒரு புண் இருக் கும் இடம் எப்படி இருக்குமோ அப்படி இருந்தது அவனது காயங்கள்! வலியும் சுத்தமாக இல்லை.

அதை ஆறிய நிலையில் பார்த்த பிறகு அவனால் முன் போல் பேசவோ கேள்வி கேட்கவோ முடியவில்லை.

"என்ன பாக்கறே... சொல்லு... எங்க இப்ப உன் காயங் கள்?"

"சாமி.... எப்படி... எப்படி இப்படி குணமாச்சு?''

"மாயமந்திரம்னு நினைக்கறியா..?''

"அ... ஆமா... ஆமா... அப்படித்தான் நினைக்கத் தோணுது. இது ஏதோ மாயமந்திரம்தான். நான் கூட கேள் விப்பட்டிருக்கேன், செத்துப்போயிட்ட பூம்பாவைக்கு ஞான சம்பந்தர் உயிர் கொடுத்ததா. அது கதைன்னு நினைச்சு ரசிச்சிருக்கேன். ஆனா இப்ப நானே... நானே ஒரு அதி சயத்துக்கு ஆட்பட்டவனா இருக்கேன்.

எப்படி சாமி...

எப்படி.... என்ன செய்தீங்க?"

"என்னைக் கேட்டா... உடம்புக்கு கட்டுப்பட்ட மனசு கொண்ட உன்னால் நான் சொல்றத புரிஞ்சுக்க முடியாது. நானும் சொல்லப் போறதில்லை."

"இல்ல... நான் புரிஞ்சுக்க முயற்சி செய்யறேன். நீங்க சொல்லுங்க, எப்படி சாமி... எப்படி என் காயங்கள் ஆறிச்சு.. என்ன பண்ணீங்க?"

"சொல்றேன்... முடிஞ்சா புரிஞ்சுக்கோ. உன் காயம் ஆற நாளாகும்னு சொன்னே இல்லையா?''

"ஆமாம்... மருந்து வேலை செய்து சிதைஞ்சுபோன உடம்போட திசுக்கள் திரும்ப உயிர்பெற, சதை கொஞ்சம்

கொஞ்சமா வளர காலமாகுன்னு டாக்டர் சொன்னார். அதுதான் நானும் உணர்ந்திருக்கிற உண்மை."

"நானும் அதை தப்புன்னு சொல்லலை. மூணு மாச காலத்தை நீ வேகமாக கடக்க நான் வழி செய்தேன். அவ்வளவுதான்!"

"எப்படி... எப்படி... மூணு மாச காலத்தை நான் வேகமா கடந்தேனா... இல்லையே மூணு மணி நேரம் முடியப்போகுது. இதோ என் கைக் கடிகாரம் அதைத்தான் சொல்லுது."

"உன் கெடிகாரத்த விடு.. என் சரீரத்தை நான் பிடிச்சுகிட்டு காலவெளியில காலத்தை விடவேகமாக நான் ஒரு மூணு மாச காலம் பயணம் செய்தேன். நீ கூட என் னோட வந்தே, உன் உடம்புதான் வந்தது. ஆனா உன் மனசு என்கிட்ட கண்டத பேசிக்கிட்டிருந்துச்சு."

"என்ன சொல்றீங்க... இந்த பீச்சுல உங்களோட நான் உக்காந்துகிட்டிருக்கேன். நாம எங்கையும் போகலை, அப் படி இருக்க எப்படி இதை சொல்றீங்க?"

"நாம மூணு மாச காலத்தை கடக்காத நிலைல எப்படி உன் உடம்பு குணமாச்சு. இல்ல குணமாயிருக்க முடியும். சொல்லேன்...?"

"என்ன சாமி நான் உங்கள கேட்டா நீங்க என்ன கேட்

கறீங்க. விடை எனக்குத்தான் தேவை, உங்களுக்கில்லை."

"சரி... உனக்கு புரியும்படியே சொல்றேன். இப்ப நீ கோமாவுல மயங்கிப் படுத்துடறே, மூணு மாசம் கழிச்சு கண் விழிச்சு எழுந்துருக்கே, மூணு மாசம் ஆயிட்டதை அப்ப எப்படி தெரிஞ்சிப்பே?"

"காலண்டரும், கெடிகாரமும், என்னை சுத்தியிருக் கறவங்களும் சொல்ல மாட்டாங்களா. அதைப் பார்த்தா தெரியாதா?"

"ஆக உனக்கு காலண்டர், கெடிகாரம் இதுதான் கணக்கு. அப்படித்தானே?’’

"ஆமாம்!"

"காலண்டர் கெடிகாரம் இரண்டும் என்ன?''

"காலம் காட்ற கருவிகள்"

"அது இரண்டும் என்ன பண்ணிகிட்டிருக்கு?"

"ஓடிகிட்டேயிருக்கு."

"ஓடிகிட்டிருக்குன்னா... அதோட வேகம் எவ்வளவு?"

"வேகமா... அதை எப்படி சொல்லமுடியும்?"

"ஓடிகிட்டிருக்கறது தெரியும். வேகம் தெரியாதா?"

"அதை எப்படி தெரிஞ்சுக்க முடியும். முடியவே முடி

யாதே?"

"ஏன் முடியாது காலைல ஆறு மணிக்கு சூரிய உதயம் ஏற்படுதா?''

"ஆமாம்..."

"அடுத்த சூரிய உதயம் மறுநாள் காலை ஆறு மணிக்கு தானே?"

"ஆமாம்..."

"நடுவுல இருபத்தி நாலு மணிநேரமா?"

''ஆமா...''

"இந்த இருபத்தி நாலு மணி நேரத்துல என்ன நடக்குது?"

"பூமியில என்னென்னமோ நடக்கும். அதை நான் எப்படி சொல்லமுடியும்?"

"பூமியில நடக்கறத நான் கேட்கல. பூமி நடந்தததான் கேட்கறேன்."

"பூமி எங்க நடக்குது.அது சுத்திக்கிட்டுன்னா இருக்கு?"

"சரி.. அது சுத்த எவ்வளவு நேரம் ஆகுது?''

"பூமி தன்னைத்தானே சுத்திக்க இருபத்தி நாலு மணி நேரம் ஆகுது."

"பூமியோட சுற்றளவு?''

"கிட்டதட்ட இருபத்தையாயிரம் மைல்கள்னு சொல்றாங்க."

"சரி... இருபத்தையாயிரம் மைல் உள்ள ஒரு விஷயம் ஒரு முறை சுற்றி முடிய இருபத்துநான்கு மணி நேரமாகுதுன்னு சொல்லலாமா?"

"ஆமாம்..."

"அப்ப இதை வெச்சு வேகத்தை கண்டுபிடிக்கலாமா?"

திருமலைச்சாமி கிட்டதட்ட ஒரு கணக்கு வாத்தியாராகி விட்டார். சிதம்பரமும் தலையை அசைத்தான்.

"கண்டுபிடிக்கலாம்..."

"அதை சும்மா ஒரு பத்தாயிரம் கி.மீ. வேகத்துலன்னு வெச்சுப்போமா..?"

"அதை எப்படி சொல்லமுடியும். கணக்கு போட்டுத்தான் சொல்ல முடியும்?"

"நான் சும்மாதான் சொன்னேன். நீ கணக்கு போட்டு ஒரு விடையை கண்டுபிடிப்பேதானே?"

''நிச்சயமா...?''

"அதை உன் காலேஜ் பாஷையில் எக்ஸ்ன்னு வெச்சுக்கலாமா?''

"உம் வெச்சுக்கலாம்...."

"அப்ப மூணுமாச காலத்துக்கு அதாவது தொண்ணூறு நாளைக்கு எத்னை எக்ஸ்?"

"தொண்ணூறு எக்ஸ்"

"அதை கூட்டிப் பெருக்கினா தொண்ணூறு நாளைக் கழிக்க எவ்வளவு வேகமா சுத்தணும்னு தெரியவருமா?"

"நிச்சயமா...?"

"இங்க இருந்து திருப்பதிக்கு நூத்தி ஐம்பது கிலோ மீட்டர் இந்த தூரத்தை நூத்தி ஐம்பது கிலோ மீட்டர் வேகத்துல கடக்க முயற்சி செய்தா திருப்பதி போய் சேர எவ்வளவு நேரம் ஆகும்?"

"ஒரு மணி நேரம்..."

"முன்னூறு கிலோ மீட்டர் வேகத்துல..."

"அரை மணிநேரம்..."

"மூவாயிரம் கிலோ மீட்டர் வேகத்துல போனா..."

"அரை நிமிடம்..."

"முப்பதாயிரம் கிலோ மீட்டர் வேகத்துல போனா..." "அவ்வளவு வேகமா போகமுடியுமா?"

"முன்னூறு முடியும்.. மூவாயிரம் முடியும்.. முப்பதாயிரம்

முடியாதா?"

"அப்படி போக முடியும்னா நினைச்சு முடிக்கறதுக்குள்ள அங்க இருப்போமே."

"அதுக்கும் குறைவான காலத்துல அங்க இருப்போம்னு சொல்லு."

"உண்மைதான். அந்த வேகத்தை உணரக்கூட நம்மால் முடியாது. அது நாம உணர முடியாத வேகம்."

"அந்த உணர முடியாத வேகத்துலதான் நானும் நீயும் இப்ப மூணு மாசத்தை கழிச்சி முடிச்சோம்." திருமலைச் சாமி அவனுக்கான பதிலை சொல்லிவிட்டு அவனை உற்றுப் பார்த்தார்.

"சாமி... நீங்க ரொம்ப சாமர்த்யமா என் வாயை என்னைக் கொண்டே கட்டிட்டிங்கன்னுதான் சொல்வேன்."

"என்னப்பா... உனக்கு முதல்ல நான் சொல்றது புரியா துன்னேன். இல்ல நான் புரிஞ்சுக்க முயற்சி செய்யறேன்னு சொன்னே, சரின்னு நீ புரிஞ்சுக்க தோதா கேள்விகள் கேட்டேன். நீதான் பதில் சொன்னே. இப்ப நான் என் னவோ உன்னை ஏமாத்திட்ட மாதிரி நினைக்கறியே."

"நீங்க ஏமாத்தலை, ஏமாத்தியிருந்தா காயம் ஆறியிருக் குமா? மூணு மாச காலத்துல ஆற வேண்டிய காயம்தான்

இது. ஆறியிருக்கறதைப் பார்க்கும்போது மூணு மாசம் ஆயிட்ட மாதிரிதான் தெரியுது. ஆனா என்னால அதை உணர முடியலையே..."

"உன் மனசுக்குத்தான் குறிப்பிட்ட வேகத்துக்கு மேல உள்ள வேகத்தை உணர முடியாதே. அதையும் நீதானே சொன்னே?"

"சரி சாமி... நான் இப்ப கேக்கறேன். இப்ப நம்ம வரைல மூணு மாசம் ஆயிடிச்சு. அதாவது நாம இரண்டு பேரும் இந்த பீச்சுக்கு வந்து மூணு மாசம் ஆயிடிச்சு. அப்ப காலண்டரை பார்த்தா மூணு மாசம் ஆகியிருக் குமா?"

"அது எப்படி... நீயும் நானும் மட்டும்தான் கால வேகத்தை தாண்டி பயணம் செய்தோம். அதே வேகத்துல திரும்பியும் வந்துட்டோம். இந்த பூமி அதோட வேகத்துல தானே சுத்திகிட்டிருக்குது. அதுவும் நம்மோட சேர்ந்து வேகமா பயணம் செய்யலையே..."

"குழப்பறிங்க சாமி..."

"குழப்பலை... தெளிய வைக்கறேன்."

"சரி சாமி நாம பயணம் செய்தோம்னு சொன்னீங்களே எப்படி பயணம் செய்தோம். எதுல பயனம் செய்தோம்?"

"ஓ.. பயணம் செய்யணும்னா வாகனம்னு ஒண்ணு வேணுமா உனக்கு?''

''வேண்டாமா?''

"ஏன் நீ நடந்தோ, ஓடியோ பயணம் செய்ததில் லையா?''

"சரி நடந்தோ இல்ல ஓடியோ பயணம் செய்ததாவே வெச்சுப்போம். அப்ப இடமாவது மாறியிருக்கணும் இல் லையா?''

''புறப்பட்ட இடத்துக்கே திரும்பி வந்திருக்கும்போது எப்படி இடம் மாறும்?"

"இப்படி கேட்டா அப்படி.. அப்படி கேட்டா இப்படியா?"

"நான்தான் சொன்னேனே. உன்னால புரிஞ்சுக்க முடியா துன்னு. நீதான் புரிஞ்சுக்குவேன்னு சொன்னே.''

"இப்பவும் சொல்றேன். புரிஞ்சுக்க துடிக்கறேன் நான். ஆனா நீங்கதான் முடியாது முடியாதுன்னு சொல்றீங்க. ஏன் முடியாது. எதனால முடியாது?"

"அப்படிக் கேள் சொல்றேன்... நீயும் சரி. மற்ற மனிதர் களும் சரி கண்ணால பாத்து காதால கேட்டு உணர்வால தொட்டு உணர்ந்தே எதையும் புரிஞ்சுகிட்டு வந்தவங்க. அதுக்கு அடங்கின விஷயங்களதான் உங்களால புரிஞ்சுக்க முடியும், அதுக்கு மீறின விஷயங்கள புரிஞ்சுக்கணும்னா, பாக்கற, கேக்கற, உணருகிற விஷயங்களக் கடந்தும் இந்த உலகத்துல பல விஷயங்கள் இருக்குங்கறதை நீங்க முதல்ல

ஒத்துக்கணும்.''

"உண்மைதான்.. அந்த கருத்துக்கு நான் உடன்பட்றேன். இந்த உடம்பை கொண்டு கண்ணால பாத்தும், காதால கேட்டும் உணர்வால உணர்ந்துகொள்ள முடிஞ்ச அளவைக் கடந்தும் இந்த உலகத்துல விஷயங்கள் இருக்கு. இதை ஒரு கருத்து ரீதியா ஒப்புக்கறேன். அதையும் உணர ணும்னா என்ன செய்யணும்?"

"யோகம் பழகணும்,"

"யோகம் பழகினா..?''

"பழகு... பழகினாதானே உன் உடம்பை பற்றிய ரகசியங் கள் தெரியவரும்."

"அதுக்கு அவ்வளவு சக்தியா?"

"இப்படி கேக்கறதே தப்பு, சக்கரை இனிக்கும்னு நான் சொன்னா நீ ஒத்துக்குவே. காரணம் அதை நீ சாப்பிட் டவன். ஆகையால அதை புரிஞ்சு ஒத்துக்க முடியும், இதே நான் மிருதுளம்பழம் பனிக்கும்னு சொன்னா என்ன செய்வே?"

''பனிக்கும்னா என்னன்னுதான் முதல்ல கேட்பேன். அப் புறமா மிருதுளம் பழம் எப்படி இருக்கும்னு கேப்பேன்."

"இதுக்கு நான் கோடி வார்த்தைல பதில் சொல்றது

சிறப்பானதா. இல்லை ஒரு மிருதுளம் பழத்தை உனக்கு தந்து சாப்பிடச் சொல்றது சிறப்பானதா?''

"கைல தந்து சாப்பிடச் சொல்வதுதான்..."

"அப்ப வார்த்தைகள் தேவை இல்லை. அனுபவம்தான் தேவை. அது இருந்தா போதும் அப்புறம் நான் சொல்லத் தேவையில்லை, எல்லாம் புரிஞ்சிடும் அப்படித்தானே?"

"நிச்சயமா... அனுபவத்தைவிடவா வார்த்தை பெரிசு..?"

"இப்படியும் சொல்லலாமா. அனுபவம்தான் எப்பவும் பெரிசு வார்த்தைகளால சில புது விஷயங்களை புரிய வைக்கவே முடியாதுன்னு."

"ஆமாம்... சில புது விஷயங்கள் வார்த்தைகளால எவ்வளவு முயன்றாலும் புரியவைக்க முடியாது. அனுபவம் தான் பெரிசு. அதுதான் நிதர்சனம்.''

"அந்த அனுபவம் எனக்கு இருக்கு. ஆனா உனக்கு இல்லை. அதனாலதான் பயணத்தை உன்னால உணர முடியல...''

"நான் உணர என்ன செய்யனும்?"

"யோகம் பழகு... யோகம் பழகு..."

"யோகத்துல அவ்வளவு ரகசியங்கள் இருக்கா?''

"உன் உடம்புலையே அவ்வளவு ரகசியங்களும் இருக்கு

யோகம் அது உனக்கு உன்னை காட்டும். அந்த யோகத் தோட வீர்யத்தை நான் பாண்டியனுக்கு கொஞ்சம் உணர்த் திட்டேன் இப்ப உனக்கும் உணர்த்தறேன். புறப்படு ஆஸ்பத் திரிக்கு போவோம்."

அவர் சொல்லிக்கொண்டே காலெடுத்தார். அவன் கடி காரத்தைப் பார்த்தான். மிகச்சரியாக மூன்று மணி நேரம் முடிந்து விட்டிருந்தது. அடுத்த நொடியே அவர்கள் இருவ ரும் ஆஸ்பத்திரி வாசலில் இருந்தனர். அவனுக்கு தூக்கி வாரிப்போட்டது. ஆஸ்பத்திரிக்கும் பீச்சுக்கும் இடையே ஏழு கிலோ மீட்டர் நூறுகிலோ மீட்டர் வேகத்தில் வந்தாலும் குறைந்தது நான்கு நிமிடம் ஆகும், எப்படி இப்படி நொடிப் போதில் வரமுடிந்தது திருமலை சாமியிடம் கேட்டால் சிரிப்பார். உனக்கு சொன்னால் புரியாது என்பார். மீறிக் கேட்டால் யோகம் பழகு என்பார். எனவே அவன் கேட்காமலேயே ஒன்றை மட்டும் புரிந்து கொண்டான்.

யோகம் கற்றால் காற்றை ஊடுருவலாம். இடம் காலம் நேரம் எல்லாம் மூன்றாம்பட்சமாகிவிடும்.

அந்த எண்ணத்தோடு உள்ளே நுழைந்தவனை சபே சனும் மஞ்சுளாவும் பார்த்து அதிசயித்தார்கள். கொஞ்சம் முன்பு காயம்பட்டு கட்டுப்போட்ட உடம்போடு இருந்தவனா இவன்?

டாக்டர்கள் கூட வியந்தார்கள்.

"என்ன சார்...நீங்க சிதம்பரமா... இல்ல வேற ஆளா?"

"சிதம்பரம்தான்... சிதம்பரமேதான்..."

"இல்லையே... உங்களுக்கு காயம்பட்டு கட்டுபோட்டிருந் தோமே, நிச்சயமா இல்லை, நீங்க வேற யாரோ?"

"இல்ல சார்... நான் சிதம்பரம்தான் நம்புங்க.. மூணுமாச கால அவகாசத்தை நான் வேகமா கடந்து இந்த புண்ணை ஆத்திகிட்டேன்."

"உளர்றீங்களா... காலத்தை வேகமா கடந்தேன் அது இதுன்னு சொல்லி நீங்க காதுல பூவைக்க முடியாது மிஸ்டர்...."

"ஐய்யோ... நான் உங்களுக்கு எதைச் சொல்லி புரிய வைப்பேன்? நான் சொல்றதுதான் உண்மை. நான் சொல் றதுதான் சத்தியம்..."

சிதம்பரம் அலறினான். அதே சமயம் அடுத்த ஆச்சரிய மாக ஐசி வார்டில் படுக்கையில் இருந்த குழந்தை பானு முழுமையான கால்களுடன் விளையாடிக் கொண்டிருந்தது.

நர்ஸ் ஒருக்தி ஓடிவந்து சொன்னாள்.

எல்லோரும் கும்பலாக ஓடிச்சென்று பார்த்தார்கள். ஆனால் திருமலை சாமியைத்தான் காணவில்லை.

"இங்க அந்த பிச்சைக்காரர் நின்று குழந்தையை தொட்டுகிட்டிருந்தார். நான் அவரை போகச் சொன்னேன். அவர் என்னைப் பார்த்தவிதமே என்னவோ போல இருந் தது. அப்புறம் அவர் போய்ட்டார்."

நர்ஸ் விளக்கமளித்தாள். பாண்டியன் சிரித்தான்.

"நான் சொல்லலை... எல்லாம் நல்லவிதமா நடந் துடும்னு.... உங்களுக்குத்தான் என்மேல நம்பிக்கையே இல்லை."

அவன் பேச்சைக்கேட்டு அழுவதா இல்லை சிரிப்பதா என்றே அவர்களுக்குத் தெரியவில்லை. இதற்குள் விஷயம் ஆஸ்பத்திரி முழுக்க பரவி ஒவ்வொருவராக குழந்தை பானுவை பார்க்க வரத் தொடங்கி விட்டனர்.

எல்லோர் முகத்திலும் ஆச்சரிய அதிர்வுகள்.

அந்த திருமலைச்சாமி சாமியார் பற்றியே பேச்சுக்கள்.

முதல் முறையாக மஞ்சுளா திருமலைச்சாமி பற்றி மரியாதையாக பாண்டியனிடம் விசாரித்தாள்.

"பார்க்க பிச்சைக்காரன் மாதிரி இருக்கற இவரா உங் களை மாத்தினவர்?"

"ஆமாம் மஞ்சுளா... ஒருத்தரை உருவத்தை வெச்சு மட்டும் எடை போடாதே. அவரைப் பத்தி தப்புத் தப்பா

பேசினியே இப்ப பாத்தியா?''

"ஆமா இது எப்படிங்க சாத்யம்?''

"இதென்ன.. இதுக்கு மேலையெல்லாம் அந்த திருமலை சாமி வித்தை காட்டுவார் தெரிஞ்சுக்க."

"வித்தைங்கறீங்க. அப்ப இது ஏதாவது கண்கட்டா?"

மஞ்சுளா விசாரிக்கையில் சபேசனும் அருகில் வந்து நின்று கொண்டார்.

"என்னம்மா சொல்றார் மாப்ள?''

''எனக்கு ஒண்ணும் புரியலப்பா. பாத்தீங்களா ஆஸ்பத் திரியே மாஞ்சு போய்டுச்சு. பத்திரிகைக்கெல்லாம் தகவல் போகப்போகுது. எல்லாரும் வந்து கேள்வி மேல கேள்வி கேட்கப்போறாங்க" மஞ்சுளாவின் கருத்துக்கு பதிலாக அங்கே சிதம்பரமும் தலையை நுழைத்தான்.

"திருமலைச்சாமி ஒரு மகாபுருஷர். காலத்தை ஜெயிச்ச வர்.இல்லேன்னா என் காயங்கள்தான் குணமாகியிருக்குமா. இல்லை இந்த பாப்பாவுக்குதான் கால் திரும்ப வந்துருக் குமா?" என்று அவருக்காக கை கூப்பினான்.

சீஃப் டாக்டர் வந்திருந்தார்.

மற்ற டாக்டர்களும் அந்த அறையில் கூடியிருந்தனர். பாண்டியனும் சிதம்பரமும் கூட அந்த அறைக்கு அழைக்

கப் பட்டிருந்தனர்.

குழந்தை பானுவை சுமந்தபடி சபேசன் ஒரு நாற்காலி யில் அமர்ந்திருந்தார். அது அப்போது பூத்த பூ போல எல்லோரையும் பார்த்தபடி சிரித்துக் கொண்டிருந்தது. டாக் டர்கள் பார்வை அந்த குழந்தை மேல்தான் இருந்தது. சீஃப் டாக்டர் செருமலோடு பேச்சை ஆரம்பித்தார்.

"டியர் டாக்டர்ஸ்.. ஒரு மிராகிளான விஷயத்தைப் பத்தி பேசறதுக்காக நாம இப்ப இங்க கூடி இருக்கோம் என்னோட எக்ஸ்பீரியன்ஸ்ல நான் இப்படி ஒரு அதிசயத் தைப் பார்த்ததே கிடையாது. பொதுவுல எனக்கு பெரிய ஆன்மிக பற்றுதலோ நம்பிக்கைகளோ பெரிசா கிடையாது. பக்திக்கும் பயத்துக்கும் நான் வித்யாசமே பார்த்ததில்லை. அப்படிப்பட்ட நானே இன்னிக்கு ஆட்டம் கண்டு போயிருக் கேன். ரத்தச் சகதியா நான் பார்த்த குழந்தை எப்படி இவ்வளவு சீக்கிரம் குணமானா? யேசுநாதர் தொட்ட மாத்திரத்துல தொழுநோய் உள்ள ஒருவர் குணமானதா கதைல படிச்சிருக்கேன். இங்கையே ஷீரடி சாய்பாபா தன் வயிற்றுக்குடலை வாய் வழியா வெளிய எடுத்து தண்ணீரில் கழுவி சுத்தம் செய்து பின் திரும்ப விழுங்கி வயிற்றை தன் முழுக்கட்டுப்பாட்டில் வைத்திருந்ததாகவும் கேள்விப்பட்டி ருக்கேன். இந்த மாதிரி நிறைய கதைகளை அடுக்கலாம். ஆனால் இன்னிக்கு நடந்துருக்கறது கதை இல்லை. நிஜம், இது எப்படி

சாத்தியம்? இது சாத்யம்னா உயிருக்கு போராடி பல மகான்களையும், உன்னதமான தலைவர்களை நாம் தக்க வெச்சுக்கலாமே."

மூச்சுவிடாமல் பேசினார் சீஃப்.

"எக்ஸ்க்யூஸ்மி சார்..."

இடைவெட்டினார் ஒருவர்.

''யெஸ்..."

"இங்க எந்த மிராகிளும் நடந்துட்டதா நான் நினைக் கல. உண்மைல இவங்களுக்கு ஒரே போல இரண்டு குழந் தைகள் இருக்கணும். இது அடிபடாத குழந்தையா இருக்க லாம். அடிபட்ட குழந்தையை இவங்க மறைச்சிருக்கலாம்."

டாக்டரின் இந்த அவநம்பிக்கையான கருத்துக்கு எரிச்சலுடன் எழுந்தாள் மஞ்சுளா.

"வாயை மூடுங்க...எனக்கு ஒரே ஒரு பெண்தான். நானும் உங்களைப்போலதான் ஆச்சரியமும் அதிர்ச்சியுமாக இருக்கேன். உங்களால நம்ப முடியலைன்னா நம்ப முடிய லைன்னு மட்டும் சொல்லுங்க. கண்டதை சொல்லாதீங்க."

"பதட்டப்படாமலும், கோபப்படாமலும் பேசுங்க, உண் மையை புரிஞ்சுக்கத்தான் இங்க கூடியிருக்கோம்." -மீண்டும் குறுக்கிட்ட சீஃப் டாக்டர் பாண்டியனையும் சிதம்பரத்தையும்

பார்த்தார். சிதம்பரம் எழுந்தான்.

"டாக்டர் நான் சில விஷயங்களை பகிர்ந்துக்கலாமா?"

"தாராளமா... உங்களுக்கு எப்படி காயங்கள் வேகமா குணமானதுன்னு நாங்க தெரிஞ்சுக்க ஆவலா இருக்கோம். எதாவது ரொம்ப விசேஷ மூலிகையால அந்த பெரியவர் இதை சாதிச்சாரா..?"

"இல்ல... நீங்க தந்த மருந்துதான். மற்றபடி குணமாக எவ்வளவு காலம் தேவையோ அவ்வளவு காலத்தை நான் ரொம்ப வேகமா கடந்தேன். அதனாலதான் குணமானேன். இதுல எந்த மாயமும் மந்திரமும் இல்லை."

"எப்படி.... எப்படி...?"

"இன்னிக்கி என்ன தேதி?"

"ஏப்ரல் மூனாம் தேதி."

"நான் ஜூலை மூணாம் தேதிவரை பயணம் செய்துட்டு திரும்பி ஏப்ரல் மூணுக்கே வந்துட்டேன். இதான் நடந்தது. அதனாலதான் என் புண் ஆறினது."

சிதம்பரத்தின் பேச்சைக் கேட்டு எல்லோரும் கொல் லென்று சிரித்தார்கள். ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டு குசுகுசுக்கவும் செய்தார்கள்.

"சைலன்ஸ்..." டாக்டர் மீண்டும் அனைவரையும் அமை

திப்படுத்திவிட்டு சிதம்பரத்தை கூர்மையாக பார்த்தபடி கேட்க ஆரம்பித்தார்.

"மிஸ்டர் சிதம்பரம். ஜூலை மூணாம் தேதி வரை பயணம் செய்ததா சொன்னீங்களே... எதுல பயணம் செய்தீங்க?"

"அது எனக்கு தெரியாது. ஆனா அப்படித்தான் அந்த திருமலைச்சாமி சொன்னார்."

"அவர் சொன்னா நீங்க நம்பிட்டீங்களா?"

"நம்பாம... குணமாயிருக்கே."

"இதுக்கு வேற காரணம் கூட இருக்குமில்லையா?"

"இல்லை... ஒரு நாளைய உலகத்தோட பூமி சுத்தற வேகத்தைவிட பலமடங்கு வேகமாக நாம சுத்தும்போது நாம் பல நாட்களை தாண்டறோம்கறது விஞ்ஞானப்படி சரி தானே?"

"சரி... அந்த வேகத்தை புவி ஈர்ப்பு விசைக்கு உட்பட்ட இந்த பூமியில இருந்துகிட்டு எப்படி பெற முடியும்? ஆயிரம் கிலோ மீட்டர் வேகத்துல ஒரு ரயில் ஓடிகிட்டி ருக்கு. அதுக்குள்ள இருக்கற நீங்க எப்படி அதைவிட கூடுதலா ஓட முடியும்? அப்படி ஓடினா ரயிலை விட்டு வெளியே போய்டுவீங்களே. அதேபோல பூமியோட வேகத் தை விட

கூடுதலான வேகத்துல பயணம் செய்தா நீங்க பூமிக்கு வெளியிலதானே அதை செய்திருக்க முடியும்?"

"ஆமாம்... முதல்ல பூமிக்கு வெளியே போய் பிறகு பயணம் செய்தோம்..."

"பூமிக்கு வெளிய போனா எப்படி சுவாசிச்சீங்க, உயி ரோட இருந்துருக்க முடியாதே.?"

டாக்டரின் மடக்கல் சிதம்பரத்தை திணறச் செய்தது. முழித்தான்.

"கமான்... பதில் சொல்லுங்க..."

"தெரியல டாக்டர்... ஆனா அவர் இப்படித்தான் சொன் னார்."

"அவர் சொன்னா நம்பிட்றதா?"

"அப்ப இது எப்படி நடந்துருக்கும்.?"

"இதுக்கு பதிலை அந்த திருமலை சாமிதான் சொல்ல னும். அவராலதான் சொல்லமுடியும். மிஸ்டர் பாண்டியன் கொஞ்சம் அவரைக் கூப்பிட்றீங்களா?"

டாக்டர் பாண்டியனை உசுப்ப நடுவில் சபேசன் எழுந்து பதில் சொன்னார்.

"டாக்டர் சார்... ஏதோ ஒரு வகைல நல்லது நடந்து ருக்கு, அதை நினைச்சு சந்தோஷப்படாம ஆயிரம் கேள்வி

கேக்கறீங்களே. உங்களுக்கே நல்லா இருக்கா?"

"அப்ப கண்ணை மூடிகிட்டு நடக்கறதை எல்லாம் நம்ப ணும்கறது உங்க அபிப்ராயமா?"

"அப்படி சொல்லலை. பொதுவுல இந்த மாதிரி விஷ யத்தை எல்லாம் தூர நின்னு எடைபோட்டு புரிஞ்சுக்க முடி யாது. கிணத்தோட ஆழம் தெரியணும்னா அதுல இறங்க ணும். அப்படித்தான் இதுவும்."

"வாட் யூ ஸே... நீங்க பேசறது புரியல."

"எங்கள விடுங்க... நாங்க கிளம்பறோம். உங்களுக்கு ரொம்ப அவசியம்னா அந்த திருமலை சாமியை திருப் பதிக்கு போய் சந்திச்சு விசாரிச்சு தெரிஞ்சுக்குங்க. அவர் தானே இவ்வளவுக்கும் ஹிரோ..."

"அதைத்தான் சொல்றேன். தயவு செய்து அவரை எங்களுக்கு அறிமுகமாவது பண்ணிவெச்சுட்டு போங்க."

"டாக்டர் சார்... நான் அவரை மனசார எப்ப நினைச் சாலும் அவர் வருவார். நீ நினைச்சாபோதும் நான் உன் எதிர்ல இருப்பேன்று சொல்வார். இப்பவும் அப்படி நினைக் கறேன். அவர் வந்தா உங்க அதிர்ஷ்டம். இல்லேன்னா என்னை குறை சொல்லாதீங்க."

பாண்டியனே டாக்டரை ஒரு மாதிரி சமாளித்துவிட்டு

கண்களை மூடிக்கொண்டு திருமலைச் சாமியை நினைத் தான்.

"சாமி... வாங்க சாமி! இங்க உங்களைப் பாக்க துடிச்சி கிட்டு இருக்காங்க. என்னென்னமோ கேக்கறாங்க. எல்லாம் நேத்துவரை நான் கேட்டுகிட்டிருந்ததுதான், வாங்க.. வந்து பதில் சொல்லுங்க... வாங்க... வாங்க."

பாண்டியனின் பிரார்த்தனை வீண் போகவில்லை. திரு மலைச்சாமி தலை அங்கே தெரிந்தது. அந்த அறைக்கதவு முன்னால் வந்து நின்றவராக எல்லோரையும் பார்த்தார்.

"சாமி வந்துட்டீங்களா?"-பாண்டியன் எழுந்து நின்று கூவினான்.

அவரும் சிரித்தபடி முன்னால் வந்தார். மார்பெல்லாம் ஒரே ரத்த சகதி யாரோ துப்பாக்கியால் சுட்டது போல இருந்தது.

"சாமி... என்ன இது ரத்தம்?"

"இதுவா... வர்ற வழியில ஒருத்தன் துப்பாக்கியால என்னை சுட்டுட்டான்."

"ஐய்யோ... துப்பாக்கி குண்டு பட்டுருக்கு. இப்படி சாதாரணமா நிக்கறீங்களே...வலிக்கலை..."

பாண்டியன் பதற திருமலைச்சாமி சிரித்தபடி தோளில்

மடிந்து கிடந்த போர்வை ஒன்றை விரித்து குளிருக்கு போர்த்திக் கொள்வது போல போர்த்திக் கொண்டார். டாக்டர்கள் வைத்த விழியை எடுக்கவில்லை. சீஃப் டாக்டர் அவரை நெருங்கி வந்து நின்றபடி கூர்ந்து கவனிக்க.

"என்ன பாக்கறீங்க?"என்றபடியே போர்வையை விலக்க இப்போது துப்புரவாய் ரத்தம் இல்லை. வழக்கமான பழைய மார்பு, எல்லோருக்கும் திக்கென்றது.

"எப்படி என் மேஜிக்?" உடனேயே அவரிடம் ஒரு மாதிரி தலை ஆட்டலோடு கேள்வி.

''மேஜிக்கா..?"

"ஆமாம்... இது மேஜிக்தான்... என்னை கட்டி பெட்டிக் குள் போட்டு கடல்லபோடு. அப்பவும் நான் வெளியே வந்துடுவேன். இதோ இந்த நபரை கத்தியால இரண்டா வெட்டிக் காட்டவா...?''

திருமலைச்சாமி ஒரு டாக்டரைக் காட்டி கேட்க டாக்டர் பதறிப் போனார்.

"நோ... ஏய் கிழவா என்கிட்ட விளையாடாதே. இப்ப தான் எல்லாம் தெரியுது. அவ்வளவும் மேஜிக்..."

"ஸ்டேஜில பண்ண வேண்டியதுதானே. எதுக்கு இப்படி ஆஸ்பத்திரியில பண்ணி எங்களை எல்லாம் குழப்பறே.?"

இது இன்னொரு டாக்டர்.

"டாக்டர் இவர் பெரிய மேஜீஷியனாவே இருக்கட்டும். இந்த குழந்தை காலை எப்படி மாற்றினார். இதுவும் கண் கட்டா.இந்த குழந்தைக்கு கால் அப்படியேதான் இருக்கா?"

மிகச்சரியாக ஒரு டாக்டர் மடக்கலாக கேட்க, மஞ்சுளா வின் தோளில் சாய்ந்திருந்த குழந்தை திடீரென்று அலற எல்லோர் பார்வையும் அந்தப்பக்கம் திரும்பியது.

என்ன ஒரு கொடுமை? பானுவின் கால்களில் பழையபடி சதைப்பிசகு, ரத்தவாரி. மருந்துக்கட்டு!

மஞ்சுளாவிற்கு மயக்கமே வந்துவிட்டது. சிதம்பரமும் தலையில் கட்டுடன் காயங்களுடன் பழையபடி தெரிந்தான்.

"என்னடா இது கொடுமை. பெரிய ஜீபூபம்பாவா இருக்கான் இந்த ஆள்." என்று ஒரு டாக்டர் புலம்ப "அப்ப நான் வரேன். நல்லா பாத்துக்குங்க உங்க எதிரில தான் இந்த திரைச்சீலை பின்னால போய் ஒளியப் போறேன்... போறேன்... போறேன்..."

திருமலைச்சாமி போய் திரைச்சீலை பின்னால் ஒளிந் தார். அதன் பின் திரைச்சீலையை விலக்கிவிட்டுப் பார்த் தால் அவரைக் காணவில்லை. எல்லோருக்கும் பக்கென் றாலும் உலகம் முழுக்க இப்படி மேஜிக் சாகசங்கள் புரிபவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள்.

லண்டனில் ஒருவர் ஐஃபல் டவரை மறைத்துக் காட்டப் போவதாக சவால் விட்டிருக்கிறார். இன்னொருவர் எகிப்திய பிரமிடையே மறைத்து அதை வேறு இடத்தில் வைக்கப் போவதாய் சொல்லி அதற்கான நாளையும் குறித்து விட்டார். இன்டர்நெட்டுக்குள் நுழைந்தால் இதுபோல தகவல்கள் ஆயிரம்... ஆயிரம்... எப்படியோ.... மனதைப் பிடித்து ஆட்டிய ஒரு மெய்ஞான மர்மம், அதெல்லாம் ஒன்றுமில்லை எல்லாம் மேஜிக்தான். கண்கட்டுதான். விஞ் ஞானம்தான் என்று முடிந்துவிட்டது.

குழந்தை கால் போய் வந்தது பற்றி யாரும் கவலைப்பட வில்லை. மாயம் என்று ஒன்றோ தெய்வீகம் என்று ஒன் றோ இருக்க முடியாது என்கிற நினைப்பே பெரிய ஒன்றாக எல்லார் மனதிலும் பாரம் இறங்கியது போல இருந்தது. பாண்டியனும் விக்கித்துப் போய்விட்டாள். அப்படியானால் திருமலைச்சாமி ஒரு மேஜிக் நிபுணர்தானா. திருப்பதியில் இருந்து அவர் தன்னை ஏமாற்றிக் கொண்டிருக்கிறாரா?

அவனுக்குள் கேள்விகள் சுழன்றன.

இருக்கமுடியாது என்றது புத்தி.

அடேய் அவர் மேஜிஷியன் என்றால் நீ நினைத்த மாத்திரத்தில் அவரால் எப்படி வர முடிந்தது. அவரிடமே கேள் என்றது மனசு.

''சாமீஈஈ....''

ஆஸ்பத்திரியைவிட்டு வெளியில் ஓடிவந்து அசோக மர நிழலில் நின்றவனாய் அவரை தியானித்தான். இந்த முறை அவர் வருவதில்தான் இருக்கிறது அவர் யார் என்பது?

"என்ன பாண்டியா?" அவரும் வந்தார்.

"என்ன சாமி இது... என்ன கூத்து இது?" -அலறினான் பாண்டியன்.

"நான் என்னப்பா பண்ணுவேன். உன்னதமான தெய்வீக ரகசியம் அணிமா. ஒரு வகைல அதுவும் விஞ்ஞானம் தான். காற்றுல கலந்திருக்கற பஞ்சபூத சக்திகளை கூட்டிப் பிசைஞ்சா எது தேவையோ அது கிடைக்கும். ஒரு சின்ன விதை இதைத்தானே செய்து மரத்தை உண்டாக்குது. நான் கைகால்களை உண்டாக்க முடியாதா?''

"இதோ பாருங்க சாமி... நானா சந்தேகப்பட்டேன். சந்தேகப்பட்டவங்க அவங்க, அவங்ககிட்ட இதை நீங்க சொல்லவேண்டியதுதானே?"

"அவங்களுக்கு சொன்னா புரியாது பாண்டியா..."

"எனக்கும்தான் புரியலை..."

"ஆனா நீ நம்பத் தயாராயிட்டே.. அது போதுமே.. அதோட உனக்கும் எனக்கும் ஒரு பந்தம் ஜென்ம ஜென்

மமா இருக்கு. அதான் உன்கிட்ட நான் அணிமா விளையாட்டு விளையாடினேன்.''

"என்ன பண்ணி என்ன... என் குழந்தை கால் திரும்ப பழையபடி ஆயிடிச்சே..."

"கவலைப்படாதே... நீயே அதை சரிசெய்யலாம்."

"நானா... எப்படி சாமி?''

"என் கூடவா... வந்து அந்த வித்தையை பழகிக்கோ."

"அதுக்கு எவ்வளவு நாள் ஆகும் சாமி.''

"எவ்வளவு நாளானா என்ன... அதைத்தான் நாம வேகமா கடந்துடுவோமே."

"ஆமாமா சிதம்பரமும் சொன்னார்... அது எப்படி சாமி."

"கேட்டுகிட்டே இருக்காதே... வா... கத்துக்கோ... ஆனா யாருக்கும் இதை சொல்லித்தராதே."

''நல்லது நாலு பேருக்கு தெரிஞ்சாதானே சாமி நல்லது.''

''இது நல்லதுன்னு உனக்கு யார் சொன்னது.?''

திருமலைச்சாமி சித்தர் சிரித்தார். அப்படியே நடந்தார். பாண்டினும் பின் தொடர்ந்தான்.

பார்க்கின்றவர்களுக்கு ஒரு பைத்தியக்காரனை இன்னொரு பைத்தியக்காரன் தொடர்கிற மாதிரி இருந்தது.

அவர்களுக்கெல்லாம் தெரியாது பைத்தியம் என்பது முக்திக்கு முந்திய நிலை என்பது.

அது சரி... திருமலைச்சாமி உண்மையில் யார்.. பைத்தியமா... சித்தரா... இல்லை நிஜமாலும் அணிமா கற்றவரா... இல்லை மேஜிக் விளையாட்டுக்காரரா?

எது நிஜம்?

*-முற்றும்-*

தமிழ்நேசன் மின்நூலகம்

www.tamilnesan1981.blogspot.in